தென்மொழி

காட்டு விலங்காண்டிக் காலத்துக் கொடுமை!

[கண்டோர் கூற்று]

காட்டு விலங்காண்டிக் காலந் தொலைந்ததென
ஏட்டில் எழுதிடினும் எத்தனையோ பேசிடினும்
மீட்டும் அதனின் மிகவிழிந்த காலமென
நாட்டுமா(று) ஈண்டு நடக்கும் நிகழ்ச்சிபல

ஊரில் தடியர்கள் ஐம்பதின்மர் கூடியங்குச்
சேரி இளைஞர் சிலரைப் பிடித்துவந்து
கட்டிவைத்து நையப் புடைத்தே அவர்தலையை
மொட்டை யடித்துக் கரும்புள்ளி செம்புள்ளி
குத்துகின்றார் குட்டிச் சுவரோரம் நின்றிருந்து
கத்துங் கழுதையின் மேலேற்றி ஊரெல்லாம்
சுற்றி வரத்துரத்திச் சூழ்ந்தார வாரித்துச்
செற்றமிகு தீய வசவுரைகள் வீசுகின்றார்

மற்றவ் இளைஞர்கள் செய்த அறக்கொடிய
குற்றமென்ன வென்றாலோ சாதிமுறை தாங்கடந்து
காதலித்த தல்லால் துணிவோடு கைப்பிடித்(து)
ஏதமின்றி வாழ்க்கைத் துணையாகக் கொள்கின்றார்
ஈங்கிவரைக் கொல்லா(து) உயிரோடு விட்டாலும்
தீங்காமென் கின்றார் சினந்து!

காவற்றுறை உண்டுகொல் காவற்றுறை உண்டுகொல்
ஏவற்றுறை என்னா(து) இயல்பினின் இயங்கும்
காவற்றுறை உண்டுகொல் காவற்றுறை உண்டுகொல்!

அரைசும் உண்டுகொல் அரைசும் உண்டுகொல்
உரைசால் சிறப்பின் உயர்தமிழ் வரைப்பில்
அரைசும் உண்டுகொல் அரைசும் உண்டுகொல்!

அறவோரும் உண்டுகொல் அறவோரும் உண்டுகொல்
திறவோர் எனத்தகு பொதுநல வாழ்வின்
அறவோரும் உண்டுகொல் அறவோரும் உண்டுகொல்!

— இறை

சுவடி - 30
ஓலை - 12
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 சிலை (திசம்பர் - 1998)

வேடிக்கையன்று விடுதலை!

கூடிக்கை கொட்டி முழக்கி உரக்கக்
குரல் கொடுத்தே
தேடிக்கை நீட்டித் திசையெலாம் வேண்டித்
தெரிந்ததுணை
நாடிக்கை கோத்துநம் நாடுதா வென்றே
நயந்திரக்க
வேடிக்கை யன்று விடுதலை; வீரர்
விளைப்பதுவே!

பாடிக்கை கூப்பி பராவிப் புகழ்ந்து
பணிந்திரக்க
வேடிக்கை யன்று விடுதலை! வீழாத
வீர மிக்க
நாடிக்குள் விம்மும் நரம்பிற்குள் பாய்ந்திடும்
நல்லரத்தம்
கோடிக்கு நூற்றுவர்க் கோடினும் நாடு
கொளப் பெறுமே!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(தென்மொழி, சுவடி : 10, ஓலை : 1, 1972)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் திபி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி — இனம் — நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.30) திபி. உ0உகூ - சிலை (திசம்பர்-'98) (ஓலை.12

ஒரு புதுப் போராட்டம்

உலகிலேயே தாய்மொழிவழிக் கல்விக்காகப் போராடும் ஒரே இனம் இந்தத் தமிழினமாகத்தான் இருக்கும் என்று துணிந்து கூறலாம். முன்னேறிய நாடுகள் அவரவர் தாய்மொழியிலேயே கல்வி பெற்று மேலும் முன்னேறுகின்றன. சில வளமற்ற சிறுமொழியைக் கொண்ட இனத்தினர் வேற்றுமொழியை ஏற்றுக் கொண்டும் முன்னேறுகின்றனர்.

இந்தத் தமிழினத்தவர்கள் மட்டும் ஒவ்வொரு காலத்திலும் மொழியையும், அதன் மரபையும் காத்துக் கொள்வதற்காக நெடுங்காலத்திலிருந்து பல்வேறு போராட்டங்களை எதிர்கொண்டே வந்துள்ளனர் என்பது இந்த இன வரலாறு.

இன்று நடக்கும் தாய்மொழிக் கல்விப் போராட்டமும்கூட நூறாண்டு அகவையுள்ளது. இந்நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தே ஒரு பக்கம் ஆக்கமும் அதற்கிணையான தாக்கமும் தொடர்ந்தே வந்திருக்கின்றன.

உண்மையில் இதற்கு எதிரி யார்? அவர்கள் ஏன் இத்தாய்மொழிக் கொள்கையை எதிர்க்க வேண்டும்? - என்று பார்த்தால் நமக்குப் பல வியப்பான செய்திகள் உள்ளன.

இன்றைக்கு ஆங்கிலம்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று தருக்கமிடுபவர்கள் முந்நூறு ஆண்டுகள் ஆண்ட ஆங்கிலேயர்கள் அல்லர். இந்தியை இந்தியாவின் பொதுமொழியாகத் திணித்த 'இந்தி'யர்களும் அல்லர்.

மூவாயிரம் ஆண்டுகளாக எந்தச் சிறு இனம் இப்பேரினத்தைச் சூழ்ச்சியாகத் தொடர்ந்து வீழ்ச்சிக்குட்படுத்தி வருகின்றதோ, அச்சிறு இனமும் அதற்காட்பட்ட இவ்வினத்தின் ஒரு பகுதியினருமே இந்தத் தாய்மொழிக் கல்விக்குத் தடையேற்படுத்தி வருகின்றனர்.

அவர்கள் அன்றைக்கு எடுத்துக் கொண்ட மொழிக் கருவி வேறு. அதன்பின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எடுத்துக் கொண்ட கருவிகள் வேறு வேறு. இன்றைக்கு இத்தாய்மொழிக் கல்விக்காக எடுத்துக் கொண்ட கருவி ஆங்கிலம். இடையிடையே இந்தியும் ஓயாத தொல்லை.

கருவிகள் வேறு வேறாக மாறி வந்திருப்பினும் கரணியம் ஒன்றே என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

அவர்களின் தாய்மொழி, தமிழைத் தவிர வேறில்லை. இனத்தை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் வேறு எங்கிருந்தும் வந்தவர்களும் அல்லர். ஒருசிலர் கலந்திருப்பினும் ஓடும் குருதி தமிழக்குருதி.

தமிழ் இனத்தை உடைத்து மகிழ்ச்சி வெறியடைந்தவர்கள், இன்றைக்கு மிஞ்சியிருக்கும் தமிழினத்தை மீண்டும் உடைக்க எண்ணிய திட்டங்களில் ஒன்றே தமிழைத் தாய்மொழிக் கல்வியினின்றும் புறக்கணிக்கும் இச்சூழ்ச்சி.

இந்திக்குத் தாய்மொழிவழிக் கல்விக்கான தரம் உண்டு; தமிழுக்கு அறிவியலை எடுத்தியம்பும் திறன் இல்லை என்று கூறுவது மிகவும் வேடிக்கை!

இத்தாய்மொழிக் கல்வி வேண்டும் என்று நாம் போராடுவதற்கு அடிப்படையாக இருப்பதே இது மக்களின் அடிப்படைத்தேவை என்பதாகும். இ்து அரசியல் ஊதியத்திற்கானப் போராட்டம் என்று ஒதுக்குவதெல்லாம் இக்கொள்கையைத் திசை திருப்புவதேயாகும்.

இத்தாய்மொழிக் கல்வியின் தேவை இந்நாட்டின் பெரும்பான்மை மக்களின் தேவை என்பதை நிறுவுவதற்குப் பல சான்றுகள் இன்று வெளிப்படையாகவே இருக்கின்றன. இதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மக்களின் எதிரியாகவே இருப்பர்.

இன்றைய பெரும்பான்மை மக்களின் தேவையை உணர்ந்தவர்கள் போலவும் அவர்களுக்கு அக்கறையாக உள்ளவர்கள் தாங்கள் என்பது போலவும் திரு: சோ - இராமசாமி போன்றோர் பிதற்றித் திரிகின்றனர். இவர்கள் எக்காலத்தும் பெரும்பான்மை மக்களின் நலன் கொண்டவர்களாக இருந்தவர்கள் அல்லர். பெரும்பான்மையர் நலம் போலப் பேசித் தங்கள் சிறுபான்மையரின் நலத்தை ஈடேற்றிக் கொள்ளும் சூழ்ச்சி மிகுந்தவர்களில் முதன்மையர்தாம் திரு. சோ - இராமசாமி போன்றோர்.

உண்மையில் ஆங்கிலவாயிலாகப் பயின்றாலும் தமிழ்வாயிலாகத் தேர்வுகளில் விடை எழுதி மதிப்பெண் மிகுதியாக வாங்க எண்ணும் மாணவர்கள் மிகுந்து வருகின்றனர்.

பொறியியல், மருத்துவம் ஆகிய நுழைவுத் தேர்வுகளில் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களில் தமிழ் வாயிலாகப் பயின்றோரே மிகுதியான எண்ணிக்கையுள்ளவர்கள்.

இந்தப் புள்ளி விளத்தங்களைக் காணும் போதே தாய்மொழி வாயிலாக- அது தமிழ் மட்டுமன்று; அவரவர் தாய்மொழி - வாயில் எதுவாயினும்- அவர்கள் ஆர்வத்துடன் பயில்கிறார்கள் - புரிந்து கொண்டு பயில்கிறார்கள் என்பது விளங்குகிறது.

இதை முழுவதுமாகப் புரிந்து கொள்பவர்கள் யாரும் தாய்மொழிக் கல்விக்கு எதிராக இருக்க மாட்டார்கள். எந்த அரசியல் கட்சியிலும் இத்தாய்மொழிக் கல்விக்கு ஆதரவானவர்கள் உண்டு. அவர்களே மக்களுக்கு நன்மைசெய்ய வல்லவர்கள். மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள். மக்கள் முன்னேற்றமே நாட்டு முன்னேற்றம்.

இதற்கு மாறானவர்கள் ஒருசார்பு மக்களின் முன்னேற்றத்தில் மட்டும் அக்கறை கொண்டு, மறுசார்பு மக்களின் மேலேறி நின்று வல் ஆளுமை செய்யும் நோக்கம் உடையவர்கள் என்பது வெளிப்படை.

இன்று இந்தப் பொது மக்களுக்காகத் தாய்மொழிக் கல்வியின் தேவையை எண்ணி இதற்காகப் போராட மக்களின் நல இயக்கங்கள் பல முன் வந்திருக்கின்றன. அறிஞர்கள் பலர் முன்வந்துள்ளனர். அரசியல் கட்சிகள் கூட முன்வந்துள்ளன.

இப்போது ஆளும் அரசும்கூட தாய்மொழிக் கல்வி வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க முன்வந்துள்ளது. ஆனால் எந்த

அளவிற்கு அவர்கள் அதைச் செயலுக்குக் கொண்டுவருவார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் காணமுடியும்.

அறிஞர்கள், இயக்கங்கள் அனைத்தும் தாய்மொழிக் கல்விக்காக எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் மிகவும் பாராட்டக் கூடியவைதாம். இருப்பினும் அம்முயற்சிகளின் வடிவங்கள் மாற்றுக் கருத்தினர்க்குக் கிண்டலுக் குரியனவாகப் போய்விடுகின்றன.

தொழிலாளர் கழகங்கள் ஊதிய உயர்வுக்காகப் போராடும் போராட்டம் போலவே உண்ணாநோன்பு, ஒலி முழக்கப் போராட்டம், பேரணி, ஊர்வலம் போன்ற வடிவங்களில் அமைக்கின்றனர்.

உண்மையில் இது நாடு தழுவிய அடிப்படை மக்களின் போராட்டம். இக்கோரிக்கை நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தையும் தழுவியுள்ளது. அக்குடும்பங்களின் முன்னேற்றத்தை ஒட்டியுள்ளது. இதன் முகாமையை அவர்கள் உணரவும் இல்லை. நாம் உணர்த்தவும் இல்லை. மாறாக எதிர்க்கொள்கை கொண்டவர்கள் அவர்களை மழுங்கடிக்கப் பல முயற்சிகளைக் கைக்கொண்டுள்ளனர்.

பொருளியல் நலிந்த குடும்பத்தினர் சிலர் கூட பிள்ளைகள் முன்னேற ஆங்கிலவழிக் கல்வியொன்றே வழி என்றெண்ணி தங்கள் எல்லைக்கு மீறி, தங்கள் குழந்தைகளை ஆங்கிலவழி மழலையர் பள்ளிகளில் சேர்க்க எண்ணிச் சேர்த்துவிடுகின்றனர்.

அக்குழந்தைகள் அங்குள்ள செல்வக் குழந்தைகளுடன் சேரவும் முடியாமல், அங்கேயே ஏற்றத்தாழ்வு உணர்வுக்கும் தள்ளப்பட்டு, மனங்கெட்டு வீணாகியும் விடுகின்றன. இது வேறுவகைக் குமுகாயச் சீர்கேடு.

இது ஒருபுறமிருக்க, இன்றைக்குத் தாய்மொழிவழிக் கல்விக்கு ஆதரவு இல்லாமலும் இல்லை. ஐம்பது விழுக்காடு மக்களுக்குக் குறைவில்லாமல் இதற்கு உண்மையான ஆதரவு தருகின்றனர்.

ஆனால் நடைமுறையில் அவர்கள் முன்னேற்றத்திற்கு மேற்கல்வியில் வாய்ப்புகளும், நூல்களும் விரிவாக இல்லை.

இப்போது ஆங்கிலவாயிலில் பயில்பவர்கள் பற்றி நாம் கவலைப்படுவது ஒருபுறமிருக்க, தமிழ்வாயிலாகப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை சிறிதெனினும் அவர்களைப் பற்றி சிந்திப்பதை உயர்த்துவோம். ஊக்குவோம். அக்கறை கொள்வோம். அப்போதுதான் அவர்கள் பெருக வாய்ப்பு ஏற்படும்.

அவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித்தரப் போராடுவோம். அவர்களின் மேற்படிப்புக்குக் கருவி நூல்களை உருவாக்குவதற்கு ஆவன செய்வோம். அக்கருவி நூல்கள் முதலில் கல்வி நிறுவனங்களுக்கு வெளியில் அனைவர்க்கும் பயன்படும். ஏன் ஆங்கிலவாயிலாக பயிலும் மாணவர்களுக்கே கூட புரிதலுக்குப் பயன்படலாம். அதன்வழி அதன் தேவைகளை நிலைப்படுத்தலாம்.

இதற்கான அரசு உதவியை வலியுறுத்தலாம். நம்மிடம் பல்துறை அறிஞர்கள் இல்லாமல் இல்லை. அவ்வவர்கள் துறையில் நூல்களைப் பெருக்கினால் போதும்.

அதுவும் ஒரு போராட்ட வகையானதே.

இப்போது கணிப்பொறிப் புரட்சிக் காலம். நான்கும் நான்கும் எட்டு என்பதற்கே கணிப்பானின்(Calculator) உதவியை நாடும் காலம் இது.

நல்ல வேளையாகக் கணிப்பொறித் தொழில்நுட்பத்தில் தமிழர்கள் உலகிலேயே பரவலாகச் சிறந்து விளங்குகின்றனர். அறிவியலறிஞர்கள் பலர் உருவாகியுள்ளனர். இவர்களில் பலர் பயின்றதும் தாய்மொழியில்; இவர்களின் ஆதரவும் தாய்மொழிவழிக் கல்விக்கே.

அனைத்துத் துறைகளிலும் கணிப்பொறி நுழைவுள்ள இக்கணிப்பொறிக் காலத்தைத் தயங்காமல் பயன்படுத்திக் கொண்டு இந்நேரத்தில் தாய்மொழியில் கணிப்பொறியுட்படப் பல்துறை நூல்களைக் கொணரத் துணியலாம்.

தாய்மொழிவழிக்கல்வி கீழிருந்துதான் வரவேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளத் தேவையில்லை. இப்போதுள்ள நடைமுறைத் தேவையான துறையைத் தமிழில் கொண்டுவந்தாலும் அத்துறையின் இன்றியமையாமையைப் பொறுத்து, கல்வியின் அனைத்துத் துறைகளும் அதன்பின் தொடர வாய்ப்புண்டு.

பல்வேறு துறை மென்மியங்களைத் தமிழில் உருவாக்கலாம்.

இதுவும் ஒரு வகைப் போராட்டந்தான்; வன்மையான போராட்டம். இதைக் கைக்கொள்ள தமிழறிஞர்கள் உட்படப் பல்துறை அறிஞர்களும் பின்பற்ற வேண்டும்.

இந்த நல்ல முயற்சியை நாடி இனிய செயின், வேற்று மொழிவழிக் கல்வியான அல்லவை தேயும். பொதுமை அறம் பெருகும்.

- -மா. பூங்குன்றன்

[PHYSICS]

இயற்பியல் — இயல்பியல் — பௌதிகம் — பூதவியல்....
இவை சரிதாமா?!......
சரியில்லை எனில் எதுதான் சரி?.....

சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார்
தூயதமிழ் – சொல்லாக்க அகரமுதலிகள் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம் — தஞ்சாவூர்.

அறிவு நுட்பம் மிகவும் கூர்த்த வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் விரைவார்ந்த அறிவியற்சூழல் வாய்ப்புடைய காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்! நொடிக்கு நொடி அறிவு விளர்ந்து விரிவடைந்துவரும் இக்காலத்தில் தாய்மொழியி லேயே அறிவு பெறவேண்டிய இன்றியமையாத் தேவையை உணரத் தலைப்படும் அறிவு — காலங்கடந்து நமக்குத் தோன்றியுள்ளது! தமிழக மக்களின் கல்வி வளர்ச்சி அறிவு வளர்ச்சி முதலியன பற்றிக் கவலையும் அக்கறையும் கொண்டு பாடநூல்களைச் செம்மையாக வெளிப்படுத்த வேண்டும் என்று துடிக்கின்ற நாம் — அவற்றிற்குரிய தலைப்புப் பெயர்களே – துறைப் பெயர்களே இன்னும் செப்பநிலை எய்தாதிருக்கும் அவல நிலையையும் மனத்திற்கொண்டவாறே நடையிடவேண்டும் – உரிய திருத்தங்களை உடனடியாகச் செய்து கொள்ளவேண்டும் என்பவற்றிற்காகவே வினவலான இக் கருத்தோட்டக் கட்டுரை முன்வைக்கப் பெறுகின்றது! முதல் தொடர் — இது!...

பொருள் மற்றும் ஆற்றல் இவற்றிற்கிடையிலான ஊடெழு வினைகள் பற்றியதும் — பொருள்களோடு தொடர்புடையது மான ஆய்வியலாகிய "Physics" என்னப்பெறும் இவ் அறிவியற்பிரிவை — இங்கு "பௌதிக சாஸ்திரம்", "பௌதீக விஞ்ஞானம்", "பௌதீகம்", "பௌதிகம்" என்றவாறான கொடு வடிவங்களிலேயே கேட்கும்படியான ஆரியவயப்பட்டிருந்த கல்விச் சூழலே ஒரு நூற்றாண்டுக்கும் முன்னரிருந்து நம்மவரைப் பின்னிக் கிடந்தது.

பூத நூல் – பொருள் நூல் (சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் : 1936), பௌதிகம் (சென்னை அரசுக் கலைச்சொல் தொகுப்பு: 1947), பௌதிகவியல் (1960), பௌதிக விஞ்ஞானம் (இலங்கை : அரச கரும மொழித் திணைக்களம் : 1960), இயல்பியல்,

இயற்பியல் (தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் : 1971), பூதவியல் (தமிழியக்கப் பாசறை — காரைக்குடி : 1972) — என்றவாறு எழுவகைப்பட்ட வடிவங்களிலும் இவ் அறிவியற் பிரிவு பெயர் வேய்ந்துகொண்டு அலைந்து – ஒருவாறு இன்று **“இயற்பியல்”** என்னும் சொற்சுட்டில் – அழுத்தம் பெற்று நிற்கின்றது!...

இதன் தகுதிநிலை வரையறுப்புக்கும் முன்னீடாக — இத் துறை பற்றிய பெயரீட்டுக்கு அடிக்களனாக விளங்கும் நம் மரபு வழிப்பட்ட நோக்கில் சில பகுதிகளை விளங்கிச் செல்லுவது தேவையான தெண்மைக்குத்(=தெளிவுக்குத்) தென்பூட்டமாகி நிற்கும்!...

பூ = விரிவடை; மலர்வுறு. (“பூ” என்னுமிச் சொல்லாக்கத் திற்கும் முன்னீடாக வேர்விளர்ச்சி நிலையுண்மைகள் உள! இங்கு, அவை விரிவஞ்சிவிடப் பெற்றுள!) பூத்தல் = விரிவடைதல், மலர்தல், தோன்றுதல், அகற்சியுறுதல் (அகலிதாதல்)

அகலிதாயிருத்தல் – (அகற்சியுற்றிருத்தல் – பரந்த பட்டிருத்தல்) என்னும் கருத்தடிப்படையிலேயே இவ்வுலகம் தமிழில் “பார்” என்னுமொரு சொல்லாலும் குறிப்பிடப்பெற்றது! பா = பரப்பு. “பாவடி யானை” பா + அர் > பாஅர் > பார் = பரந்த நிலம். பார் + அகம் > பாரகம் = உலகம். [“உலகம்” எனுஞ் செந்தமிழ்ச் சொல்லை — இங்கு வந்தேறி “லோக்” என்றவாறு கொச்சையுறப் பலுக்கிய ஆரியப் பார்ப்பனர் — தமிழில் (ஒருபொருள் பல சொற்களுளொன்றாக) வழங்கிய “பார்” என்னும் சொல்லுள் பரந்து விரிந்து கிடக்கும் பரப்புப் பொருளைப் பாராது — பார்த்தல்(விழித்து நோக்குதல்) பொருளில் உள்ளதாகத் தவறாகக் கருதிப் பார்த்துவிட்டு — “Look” (ஆங்கிலம்) என்பதன் முன்னோடிச் சொல்லான கிரேக்க வழிப்பட்ட தம் முன்னோரின் மொழியிலிருந்து — தாம் சுமந்து கொணர்ந்த “Lok” என்னும் ஒரு சொல்லொடு தொடர்புடைய தாகவிருக்கும் என அதனைத் தவறாகக் கருதிக் கொண்டு வலிந்து பற்றி வரலாயினர்! நந்தமிழவர் மீமிகு பண்டையில் உருவாக்கிய “உலகம்” என்னும் சொல் – “லோக்” என்பதனின்று திரி பெய்தியதே என்றவாறு தொடர்ந்து நம்மிடமே கருத்தேற்றியும் வந்தனர். பரிமேலழகியரென்னும் வல்லிய திருக்குறள் உரை யாசிரியனான பழுத்த பார்ப்பான் — நம் முதற்குறளின் ஈற்றில் இறும் “உலகு” எனும் சொற்கு உரையவிழ்க்க வந்தவிடத்து — **“காணப்பட்ட உலகத்தால்”** என்றவாறு வலிய விரித்த உரையுள்ளும் — ஆரியக்குழாம் கொண்டிருந்த கருதுகோளின் — விண்டு உய்த்த கருத்துப் பரப்பலின் — தொடர்ப்பாட்டு இழை யோட்டத்தைக் காணலாகும்!]

பரந்து விரிந்ததாகிய இப் பாரகத்தை – நனந்தலை, வியன்றலை, வியலகம், மலர்தலை என்றவாறெல்லாம் பல வடிவங்களிற் பயின்றுள்ளமையில் – தமிழினத்தவரின் கருத்துப் போக்கு ஒருமை – ஐயந்திரிபறப் பதிவெய்தியுள்ளது. இதே அடிப்படையிலேயே – பரந்துபட்ட இவ்வுலகைப் “பூ” என்றும் வழங்கியுள்ளனர்! “பூவுலகம்” என்னும் உலக வழக்குச் சொல்லும் பரப்படிப்படைக் கருவை உருத்தி நிற்கின்றது! பூ = உலகம் (பிங்கலம் : 3875)

ஆரியர் வருகைக்கு முன்னர் நாவலந்தேயம் முழுமையிலும் நந்தமிழரும் – நம் இனப்பிரிவினருமே பரந்து கிளைத்து வாழ்ந்திருந்தனர்! அன்னன்னோரின் வட்டார வழக்கு மொழிகளாகப் பயில்விலிருந்தன யாவும் தமிழ்மொழியின் திசைவு – திரிபு ஆகிய வழக்குகளாலான தொகையங்களே! அக்கால், வடதிசைக் கண் வதிந்து வந்த நம் இனவழியினர் எவராலோ – ஒரு புதிய கூட்டுச் சொல் ஒன்றும் – இப் பூவுலகத்தைச் செவ்விதின் சுட்டுதற்கு உருவாக்கப்பட்டுப் பரந்த பயில்வில் பயன்பாடு கொண்டிருந்திருக்கின்றது! அவ் – அரிய இனிய கூட்டுச் சொல் — “பூ – மண்” என்பதாகும்.

“பூவுலகம்” என்னும் கருவுருவையும் போன்மை யமைப்பையும் தாங்கி நிற்கும் அழகிய தெள்ளிய கூட்டுச் சொல் – இது! [படி > ப்ரதி; மெது > ம்ருது; பவளம் > ப்ரவாள; கமுகு > க்ரமுக; பரு>ப்ருஹ் — என்றவாறெல்லாம் இடை மிகைப்புறுத்தி எடுத்திழுத்து வலித்து மிகப்பல சொற்களைத் தன்னதாக்கிக் கொண்ட கலப்பு மொழியான சமற்கிருதம் — “மண்” என்னும் நம் செந்தமிழ் மண்ணுக்குரிய சொல்லையும் “ம்ருண” என்ற வடிவில் திரித்துக்கொண்டு கொழுத்தது. ம்ருணாளினி (மிருணாளினி) என்பது மண்மகளைக் குறிக்கும் வடசொல். வேறொரு முடியும் அதிலில்லை!]

இப் “பூ–மண்” என்னும் அழகிய செப்ப வடிவத்தை, ஆரியர் தம் இருக்கு வேதம் என்னும் மறையோத்துக்குள் “Bhūman” என்றவாறு நுழைத்து வைத்துள்ளனர். [Bhūman = the earth; World. (Rig Veda)]. கடை மறையாகிய அவர்களின் அதர்வண வேதத்துள், இப் “பூ மண்” எனும் வடிவை “Bhu man” என்றவாறு நெடுமுதற் குறுக்கி — ஆள்புலம், தேசம், மாவட்டம் என்னும் பொருட்பாடுகள்படப் படிவித்துள்ளனர். பாலி மொழியுள் இப் “பூ மண்” என்பதன் திரிபுவடிவாகிய “Bhumma” என்பது — மண்ணை மட்டுமே குறித்துப் பயில்வது கூர்ந்து கருதுதற்குரியது! இப் “பூ – மண்” என்பது – சமற்கிருதத்துள் “Bhūman” என்று நின்று பயில்வுற்ற

பின்னர் – அருகிக் குறுகிக் கடைதிரிந்த நிலையிலாகி "Bhūmi" என்றவாறு வழக்குறத் தொடங்கியது! இவ்வகைத் திரிபுச் சாரல்வழி Bhūm, Bhum என்றவாறான வடிவுகளும் வடபால் மொழிகள் சிலவற்றுள் படிந்தன.

Pali : Bhūmi = earth; ground.
Bhummi = soil.
Prakrit : Bhumi; Bhummi = ground
Nidoc : Bhuma = land
waigali : Bhūm
kati;(Katei) : Byūm
Dameli : Bhum : earth ; ground.
Ashkun : Bhum : earth ; ground.
Pashai : Bhūm
Kashmiri : Būm; bum
Old Gujarati : Bhuim
Gawar Bati : bum
Kalasha : Bhum
Rumbar dialect of Kalasha : Bhum
Savi(Dardic) : Bhumē
Torwali(Dardic) : Bhumē = field *(புலம்)*
Phalūra : bhum = ground.

"பூ" – என்றவாறு பரந்துபட்ட இவ்வுலகைக் குறித்த தமிழ்ச் சொல் வடபால் தமிழினப் பிரிவாரின் ஆட்சிக்கிடையே பூ > பூ + இ > பூயி என்றவாறு இடப்பொருளீறான ஐகாரத்தின் அடுத்த திரிபான "இ" சேர்ந்த நிலையிலாக வழங்கியுள்ளது.

(ஐ : ஓரிடப் பொருளீறு. (ஒ.நோ : கொல்லை; படப்பை; வேலை.) இதன் மரபு நீட்சியே, ஊர்ப் பெயரைச் சுருக்கமாக கூறுகையில் — சுட்டுகையில் இக்காலும் பதிவெய்திப் பயில்வுறுகின்றது. (காண்க : புதுச்சேரி > புதுவை. புதுக்கோட்டை > புதுகை. கோவன்புத்தூர் > கோவை. நெல்வேலி > நெல்லை. மாமல்லபுரம் > மல்லை) (கொல்+ல்+ஐ > கொல்லை = (மரஞ்செடிகொடிகள்) நிலைத் திணைகள் அழிக்கப்பெற்றுச் செப்பப்படுத்தப் பெற்ற புன்செய் நிலம். கொல்லுதல் = அழித்தல். ஒ.நோ : 1. "காடு கொன்று நாடாக்கி...." 2. "இளைதாக முள்மரம் கொல்க!" (குறள்.). மரத்தை அழித்து அதனில் உரிய பொருளை உருவாக்கும் தச்சர் — மரங்கொல் தச்சர் (மரங்கொஃறச்சர் (மணி

: 28 : 37). என்னப் பெற்ற பதிவும் இவ்விடத்தில் கருத்திற் கொள்ள வேண்டிய வொன்று! இக் கொல்லை என்பது "கொல்லி" என்றவாறு வழக்கில் பயில்வுறும் நிலையில் – இவ் ஐகார – இகரத் திரிபின் போங்கைக் காணலாகும்!)

பூ > பூ + இ > (பூயி)

வடபால் மொழிகள் சிலவற்றில் இதன் பதிவுப் படிவுகளாகுவன:

Sindhi : Bhū ; bhui
Lahnola : Bhoē
Awankari dialect of lahnola : Bhūi
West Pahari : Bhui
Panjabi : Bhū, bhō ; bhui
Jaunsari dialect of West pahari : Bhūi
Kumanni : Bhī
Assamese : Bhūi
Bengali : Bhui
Marathi : Bhui
Bhojpuri : Bhui
Awadhi : Bhui
Lakhimpuri dialect of awadhi : Bhui
Hindi : Bhū ; bhui
Gujarati : Bhū
Maithili : bhui
Konkani : bhui

பூ > பூ + து = பூது = விரிவடை.
பூதுதல் = விரிவடைதல்; பெரிதாதல்.
பூதித்தல் > பூரித்தல் = விரிவடைதல்; பெரிதாதல்;
இறும்பூது = பெருவியப்பு; பெருவியப்பாலேற்படும் மகிழ்வு; வியப்பு.
"இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்" *(மதுரைக் : 486)*
பூது + அன் > பூதன் = பெரியோன்; பெருமைக்குரியவன்.

பெருமைக்குரியவன் என்றவாறான பொருளில் வரும் – இப் "பூதன்" என்னும் பெயர் — கழக இலக்கியக் காலத்தில் பெரு வழக்கினதாகப் பரவியிருந்தது. (காண்க : இளம்பூதனார்; கரும்பிள்ளைப் பூதனார்; காவன்முல்லைப் பூதனார்; காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்; குன்றம்பூதனார்; கோடை பாடிய பெரும்பூதனார்; சேந்தம்பூதனார்;

மருங்கூர்ப் பாகைச் சாத்தன்பூதனார்; வெண்பூதன்; ஈழத்துப் பூதன் தேவனார்; பூதங்கண்ணனார்) (மேலுங் காண்க: ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்; பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு.)

பூதன் + தந்தை > பூந்தை.
ஆதன் + தந்தை > ஆந்தை

[காண்க : "ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
பெயரொற் றகரம் துவரக் கெடுமே"
(தொல். எழுத். உயிர் : 348)]

பூது = பெருகு; விரிவடை; வளர்.
> (சமற்கிருதம்) bhūta : become
(பாலி) bhūta = grown ; become

பூது+அம் > பூதம் : விரிவடைவது; விரிவடையும் தோற்றமுடையது; விரிவுறும் தோற்றத்துப் பெரும்பேய்.

"கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடும்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோல்"
(பெரும் : 235)

(நச். உரை : துணங்கைக் கூத்தாடுகின்ற அழகினையுடைய பூதங்கள் வெள்ளிய துகிலையுடுத்து நின்றவைபோல்.....)

பூதம் > (சமற்கிருதம்) Bhūta = Spirit ; demon
(பாலி) bhūta : demon

பூதம் > (Greek) Puthon : Sooth saying demon.

[Puthon>Python (Greek) a huge serpent or dragon killed by Apollo.]

>(English) Pythomers = Witch.

விரிவுறும் இயற்கைக் கூறுகளாகிய நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐந்தும் - "பூதம்" என்னும் பெயரால் பண்டையில் தமிழ மாந்தரால் சுட்டப் பெற்றன

1. "காலம் உலகம் உயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்"
(தொல். கிளவி : 58)

தெய்வச் சிலையார் உரை : (பூதம்=) பூதம் என்பது நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும்பூதம்.

2. "மண்டிணிந்த நிலனும் – நிலனேந்திய விசும்பும் – விசும்புதைவரு வளியும் – வளித் தலைஇய தீயும் – தீமுரணிய நீருமென்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல" *(புறம் : 2 : 1–6)*

3. "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" *(குறள் : 271)*

4. "வளியென வரூஉம் பூதக் கிளவியும்"
(தொல். எழுத். உயிர் : 242)

பூதம் > (Sbt) Bhuta > bhoutika.
bhoutika Sastra : Physics

[ஒ.நோ. : புத்ர > Poutra. புத்தம் > bouddha
புராணிக > Pourānika புருஷ > Pourusha
குமார > Koumāra.]

"பூ" – என்னும் நம் தமிழ் வேரொலி – கிரேக்க மொழியில் "phu" என்றவாறே படிந்து பரத்தல் – விரிவடைதல் போலும் கருத்தடிப்படைகளையுடைய பல சொற்களை அங்குக் கிளைக்கும் நிலைகளுக்கான வாய்காலிட்டுள்ளது! [(GK) phu = Wide Spread.

(Gk) pū > phu = blow ; inflate

(Gk) Phusa > (Latin) Pusula > Pussula > Pustula > (Old French) > Pustule > (Eng.) Pustule = pimple. *(கொப்புளம் ; பரு)* *(காண்க : பக் : 726.* ox. Dic. of English Etymology. C.T. Onious*)*

"பூ" என்னும் தமிழ்வேர் வழியிற் கிரேக்க மொழியிற் படிந்த "Phu" என்னும் அடிச்சொல்லின் கிளைப்பாகவே Phusis (=nature) (= இயல்பாகத் தோன்றி விரிவடைவதாகிய இயற்கை) என்றவாறான ஆக்கச் சொல்லும் ஆங்கு எழுந்தது. "Phusis" என்னும் சொல்வழியில் "Phusikos" என்னும் பிறிதொரு வடிவந் தோன்றி – அதுவே "Phusike" என்னுமாறு திரிபுற்று இலத்தீனத்தில் Physica, physicae எனும் வடிவங்களிலும், பிரஞ்சில் Physique என்னும் வடிவத்திலும் படிந்து பரந்து பயில்வுற வழிகோலியது! இவையனைத்திலும் இயற்கையறிவியல் (natural science) என்னும் செப்பப் பொருளே கொள்ளப் பெற்றது!

"Physique" என்னும் பிரஞ்சு வழக்கு, மேலும் திரிந்து "fisique." என்னும் வடிவெய்தியது. இயற்கைப் பொருளினின்று கிடைக்கும் மருந்து(Medicine) என்ற பொருளில் இவ்வடிவு பயில்வுற்றது. [(Gk)

Phusikos (phusis > phusi. (Kos–suffix) = nature, essence of a thing.] இத் தகுநிலைகளிலான தொடர்புறவுகளின் தாக்குரவாலேயே இன்று "Physic" என வழங்கும் ஆங்கிலச் சொல் *1.* இயற்கை அறிவியல்(natural science) *2.* மருந்து(medicine) *3.* மருந்து உருவாக்கம்Medicinal preparation) *4.* உடலை நலப்படுத்துங் கலை (healing art) என்றவாறான நாற்பொருட்பாடுகளில் பயன்படுத்தப் பெறுகின்றது என்பதையும் நாம் இவ்விடத்திற் கருதிப் பார்த்தல் வேண்டும்.

அறிவியற் கருத்துகளின் விரிவும் விளக்கமும் – தெரிவும் துலக்கமும் பெருகப் பெருகத் – தொகுபெயரில் அமைந்திருந்த தொடக்கப் பெயர் – வரையறையுடையதாகிய ஒரேயொரு செப்பப் பொருட்பாட்டில் மட்டுமே வழங்கவும் – அதனின் நுண்பகுதிகளுக்குரிய கூறுகள் பல்வேறு துறைப் பிரிவுகளாகத் தனித்தனியே வளர்ந்துவரவுமான முறைநிலையொழுங்கு இக் காலத்தில் மிகத் தெளிவாகக் கடைப்பிடிக்கப் பெற்று வருகின்றது! இவ் வகையில் "இயற்கை அறிவியல்" என்னும் பொதுப் பொருளில் வழங்கி நின்ற "Physics" (=natural science) என்பது — "பொருள் மற்றும் ஆற்றல் இவற்றிற்கிடையிலான ஊடெழு வினைகள் பற்றியதும் – பொருள்களோடு தொடர்புடையது மான ஆய்வியற் பிரிவு" — என்னும் தெளிந்த வரையறுப்புடைய பொருளில் இன்று நின்று நிலைகொண்டுள்ளது!

"nature" என்னும் சொல்லுக்கு இயற்கை, இயல்பு (இயற்கைப் பண்பாகிய நடத்தை) என்றவாறான இருவகை அடிப்படைப் பொருள்கள் பரந்த பயில்வு நிலையில் உள்ளன. இதனுள் "இயற்கை" என்னும் பொருளடிப்படை மட்டுமே "Physics" என்பதன் கருவகத்துள் உள்ளது என அறியாது மயங்கிய இயல்பினராய் – **nature** என்னும் சொல்லுக்கு அமைந்திருக்கும் "இயல்பு" என்னும் பிறிதொரு பொருளையுட் கொண்ட சிலர் ('இயல்பு' என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பதினாறு வகைப்பட்ட பொருட்பாடுகள் தமிழில் உள்ளனவாதலின் – அவற்றின்வழியே பின்னர் நேரலாகும் மயக்கங்களையும் குழப்படிகளையும் எண்ணிப் பாராதோராய்—) – மிகப் பிழையான பொருட்பாடு அமையுமாறு "இயல்பியல்" (=Physics) என்றவாறு துறைப்பெயர் நிலையில் சுட்டவும் பயிலவும் தொடங்கினர்!

இது இயல்பு பற்றிய இயலன்று என்று இடைநின்று சிந்தித்த சிலர், "இயற்பு" என்னும் சொல் வடிவை மீளவுஞ் சமைத்துக் கொண்டு ("இயற்பு" என்னும் சொல்லுக்கு "இயக்கம்" என்னும்

பொருட்பாடு மட்டுமே முன்னர் வழக்கிலிருந்தது. (காண்க : "இயற்பின்றி எல்லாம் இருள் மூடமாமே" திருமந்திரம் : 2210) இயலை உடனிணைத்து "இயற்பியல்" என்றவாறு வழங்கிவரத் தலைப்பட்டனர்! (இவ் வகையிலான முயற்சியும் பயிற்சியும் பன்மொழிப் புலவர். அப்பாத்துரையாரை அடியொற்றியதாகும். (காண்க : செ.ப.க. ஆங்கிலம் — தமிழ் அகராதி. பக் : 733. (மேலுங் காண்க : பக் : 216. ஆட்சி. அக.)

"இயல்பியல்" என்பதுவும் – "இயற்பியல்" என்பதுவும்—, கிரேக்கச் சொல்லுக்குரிய பொருட்பாடுகளை அடியொற்றி அமைக்கப்பெற்ற குழப்ப வடிவங்கள்!... பௌதீகமும் – பௌதீக (இயலும்) – பௌதீக – (விஞ்ஞானமும்) — இயற்கை வியல்வுப் பொருள்குறித்துச் செந்தமிழில் ஆக்கம் பெற்றிருந்ததும், நீணெடுங் காலமாக மிகப்பரவலாக இம் மண்ணில் தொடர்ந்து வழங்கப் பெற்று வருவதுமான (பூது+அம்) > பூத–ம் என்னும் சொல் கண்டு – கொண்டு கோணுறுத்திய நிலையிலாகப் புரட்டி யெடுத்துப் பதித்துக் கொண்ட சமற்கிருத வழியிலாகிய சுட்டுகள்!....

"பூதநூல் — பொருள்நூல்" என்றவாறு சென்னை மாநிலத் தமிழ்க் கழகத்தார் (சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்) (1936) – குறித்ததுவும் – அதனை உற்று உள்நோக்கிப் – பற்றி அடி யொற்றிய நிலையிலாகப் "பூதவியல்" என்றவாறு காரைக்குடித் தமிழியக்கப் பாசறையினர் (1972) மீண்டும் புதுக்கி வழங்கிப் பதித்ததுவும் – தமிழர் அறிவியல் மரபையும் உணர்வையும் மதித்து உணர்ந்து வழிப்பட்டு இயங்கும் மானத் தகைமை யுடையன!

பண்டைப் பேதையருட் சிலர் அறியாமை சான்ற மனவச்சக் கருத்தேற்றக் கோளாற்றால் படிப்படியே விரிவடைந்து பருப்ப முறுவதாகக் கருதிக்கொண்டு சுட்டிய பெயர் சூட்டலின் வழியே பெருக நின்றாடிய "பூதம்" என்னும் பேய்வகையுட் பேருருவாகிய ஓர் அல்லுருவை இவ்விடத்தில் மீண்டும் தேவையில்லாமலேயே கருதி அச்சமும் மயக்கமும் கொள்ளுதற்கு மேலும் இடந்தரா நிலையிலாக [(பூதம் + இயல்>) பூதவியல் என்னும் மயக்கந் தருஞ் சொல்லமைவைத் தவிர்த்துவிட்டு—) —விரிவடைதற் கருத் தடிப்படையையுடைய அடிச் சொல்லான "பூது" என்னும் வடிவை மட்டுங்கொண்டு "இயல்" என்பதனை அதனொடு இயல்பாகப் புணர்த்தி — (வேதியல் என்னும் வடிவுக்கு நேரிய வகையில்...) "பூதியல்" (=Physics) என்றவாறு ஏற்புற அமைத்துக்கொண்டு வழங்கத் தலைப்படுதலே — சரியாகும்!.... ❑

‘உ.த.க. அறுக்கப்பட்ட செங்கல்!’

— ஒரு விளக்கம்—

அண்மையில் வெளிவந்த ‘நந்தன் வழி’ இதழில் (திச. 1-15-’98) திரு. தியாகு அவர்கள் எழுதியுள்ள ‘விலங்கிற்குள் மனிதர்கள்’ தொடரின் ‘அறுக்கப்பட்ட செங்கல்’ என்னுங் கட்டுரை, ‘தென்மொழி’, ‘உலகத் தமிழ்க் கழகம்’ முதலானவற்றையும், மொழி ஞாயிறு பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் முதலானோரையுங் குறித்து அன்பர்களிடையே ஐயமுந் திரிபும் நிகழுமாறு உண்மைக்கு வேறாகவும் மாறாகவும் பல செய்திகளைத் தாங்கியிருத்தலால், ஈண்டு அதுபற்றிய விளக்கம் இடம்பெறுவது இன்றியமையாததாகிவிட்டது.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தென்மொழியின் தொடக்கக் காலத்திலிருந்தே மொழி, இனம், நாடு என்னும் முந்நிலைகளிலும் அழுத்தந் திருத்தமாகப் பல கருத்துகளை வெளிப்படுத்தியும் அடுத்தடுத்துப் பல செயற்பாடுகளை மேற் கொண்டும் வந்திருக்கிறார்கள்.

மொழிநிலையில் பிறமொழி கலவாத் தூய்மை, கலைச்சொல் ஆக்கம், புதுமை இலக்கியப் படைப்புகள், பலதுறை நூலாக்கங்கள், ஆய்வுரைகள், இந்தியெதிர்ப்பு முதலியனவாகவும், இனநிலையில் குமுகாயச் சீர்திருத்தமாகச் சாதியொழிப்பு, சமயச் சழக்கறுப்பு, கலப்புமணம், ஆரியக் கொட்டமடக்கல் முதலியனவாகவும் நாட்டு நிலையில் இந்தியக் கட்டமைப்பினின்று முழுமையாக விடுதலை பெற்று இறையாண்மை கொண்ட தமிழ்நாடு காணலாகவும் பாவலரேற்றின் எழுத்தும் செயலும் தொடர்ந்தன.

தென்மொழி இதழ் வெளிவந்து மக்களிடையே பரவத் தொடங்கிய நிலையிலேயே தனியொரு மொழியாக இந்தி இந்தியாவெங்கணும் முழு வீச்சில் கோலோச்சும் நிலை நெருங்கியதால், அவ் வல்லாண்மையை முறியடிக்க முனைந்து இந்தி யெதிர்ப்புப் போர் கிளர்ந்தெழுமாறு பாவலரேற்றின் வீறார்ந்த பாடல்களுங் கட்டுரைகளுந் தென்மொழியில் இடம் பெற்றன. கல்லூரி மாணவர்களிடையே தென்மொழி ஓர் இயக்கமாகவே அமைந்தது.

இந்தியெதிர்ப்புப் போராட்டம் ஒரு கட்டத்தை எட்டிய

புலவர் இறைக்குருவனார்

நிலையில், அதில் ஈடுபட்ட தி.மு. கழகம் ஆட்சியைக் குறிவைத்துச் செயற்பட்டுக் கொண்டிருந்த போது, தென்மொழியின் ஆசிரியவுரை (சுவடி : 4; ஓலை : 5) 'தமிழகம் பிரிதலே தக்கது' என்னுந் தலைப்பைத் தாங்கி வெளிவந்தது. அதற்கு முன்னரே தமிழ்நாட்டு விடுதலை குறித்து நூற்றுக் கணக்கான பாடல்களும், தனித்தமிழ்நாடு என்னுந் தலைப்பிலும் இன்ன பிற தலைப்புகளிலுமான கட்டுரைகள் பாவலரேறு அவர்களால் எழுதப்பட்டுள்ளன.

இனி, தென்மொழியின் கொள்கைகளைச் செயற்படுத்தும் நோக்கில் முறையான ஓர் அமைப்பை நிறுவும் எண்ணம் அரும்பியது. இந்நிலையில் இன்னொன்றைத் தெரிந்துகொள்வது இன்றியமையாதது.

பாவலரேறு அவர்களின் அரும்பெறல் ஆசிரியப் பெருந் தகையான மொழிஞாயிறு பாவாணர் அவர்கள், ஆரியத்தைத் துணிந்து எதிர்த்ததன் விளைவாக அண்ணாமலைப் பல்கலைக் கழக அகர முதலிப் பணியினின்றும் வெளியேற்றப்பட்டுக் காட்டுப்பாடியில் கடுமையான சிக்கல்களுக்கிடையில் தம் தமிழ்ப் பணியில் தொடர்ந்து உழன்று வந்தார். அந்நிலையில் தென்மொழியில் பொருட்கொடைத் திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படுத்தினார், பாவலரேறு. அஃது ஓரளவிற்கு உதவியதேனும் பாவாணர் அவரது தகுதிக்கேற்ற நிலையில் உயரவில்லை. அரசும் பல்கலைக் கழகங்களும் அவரைப் புறக்கணிப்பதில் தலைநின்றன. அவரை வளரும் தலைமுறையி னருக்கு அறிமுகப்படுத்தி, அவருக்குக் களைகணாக ஓர் அணியை உருவாக்கும் முயற்சியில் தென்மொழி தன்னைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி அயல்நாடுக ளிலும் பாவாணர் பெயர் தாங்கிய அமைப்புகள் சில தோன்றின. அவற்றுள் மலேசியாவில் ஈப்போ பாவாணர் மன்றம் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறிருந்தும், மலேசியாவில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பாவாணர் அழைக்கப்படவில்லை. தமிழ் நாட்டிலிருந்து தமிழறிஞர்கள் என்ற பெயரில் யார் யாரோ சென்றனர். அற்றை முதலமைச்சர் பத்தவச்சலத்தின் மகள் திரு. சரோசினியும் அவர் கணவர் திரு. வரதப்பனுங்கூட மலேசியாவுக்குச் சென்றனர், அம் மாநாட்டில் தமிழாராய்ச்சி செய்வதற்காக . அது கிடக்க! அடுத்துத் தி.மு. கழகம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தபின் அதன் பெருந்துணையோடு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் பாவாணர் புறக்கணிக்கப் பட்டார். மாநாட்டில் கண்துடைப்பாக அப்புறக்கணிப்பை மறைக்கும் முயற்சியும் நடைபெற்றது.

இந்நிலைகள் தென்மொழி அன்பர்களிடையேயும், பொதுவாகப் பாவாணர்பால் பற்றுக்கொண்ட அனைவரிடத்திலும் மிகுந்த மனவுறுத்தலை ஏற்படுத்தின. பாவாணர் கருத்துகளை வெளிப் படுத்தவும் மக்களிடையே முனைப்பாகப் பரப்பவும் ஓர் வலுவான அமைப்பை உருவாக்க வேண்டும் என்னும் எண்ணம் அழுத்தமுற்றது. அக்கால் புலவர் சேந்த மாங்குடியார் முயற்சியால் இயங்கிவந்த தனித்தமிழ்க் கழகம், திருச்சியில் ஓர் அமைப்பு மாநாட்டை நடத்தியது. *(1968 அத். 5-6)* அம் மாநாட்டில் உலகத்தமிழ்க் கழகம் அமைக்கப்பெற்றது. அதன் தலைவராக மொழிஞாயிறு பாவாணரும், துணைத் தலைவராக முனைவர் மெ. அழகனாரும்(சுந்தரம்), பொதுச் செயலாளராகப் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும், துணைப் பொதுச் செயலாளராகப் புலவர் இறைக்குருவனாரும், பொருளாள ராகச் செங்கை. செந்தமிழ்க்கிழாரும் தெரிந்தெடுக்கப் பெற்றனர்.

உலகத் தமிழ்க் கழகத்தின் நெறிமுறைகள் மொழிஞாயிறு பாவாணர், பேரா. தி.வை. சொக்கப்பனார், பேரா. நிலவழகனார், பாவலரேறு பெருஞ்சித்திரனார், திரு. செங்கை. செந்தமிழ்க் கிழார் ஆகிய ஐவர் குழுவால் வகுக்கப்பட்டன. *(20-10-68)*

"குல, மத, கட்சிச் சார்பின்றியும் தன்னல, வணிக, விளம்பர நோக்கின்றியும் குமரிநாட்டு மரபைத் தழுவியும் மறைமலையடிகள் காட்டிய வழியைக் கடைப்பிடித்தும் எல்லாத் துறையிலும் தமிழைத் தூய்மையாக வளர்த்தல்" என்பது முதல் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்னுங் கொள்கையை உலக முழுதும் பரப்புதல்" என்பது ஈறாகப் பதினொரு கொள்கைகளைக் கொண்டது உலகத் தமிழ்க் கழகம். தமிழ்த் தொடர்பான கொள்கைகளே யாயினும் மிகவும் விரிவான செயற்பாட்டுக்கு உரியவை.

அன்றியும் உ.த.க.வில் உறுப்பினராக விரும்புவார் எவரும் "குல –இன வேறுபாடுகளை நான் ஒப்புகிலேன். அவற்றின் பெயரையோ கொள்கைகளையோ நான் எவ்விடத்தும் எந் நிலையிலும் வற்புறுத்த மாட்டேன்" என்னும் உறுதியளித்தே உறுப்பினராகச் சேர்தல் வேண்டும் என்னும் குமுகாய நோக்கும் உ.த.க.வுக்கு உண்டு.

பாவலரேறு அவர்களுக்கு உ.த.க.வின் கொள்கைகள் அனைத்தும் உடன்பாடானவையே; எனினும் அவர்தம் கொள்கைகள் செயற்பாடுகள் என்பன உ.த.க. அளவில் அடங்குவன அல்ல. இனம், நாடு என்னும் நிலைகளில் அவற்றுக்கும் அப்பால் விரிவானவை. இது தென்மொழி யன்பர்கள் அனைவர்க்கும் தெரிந்ததே. உ.த.க. மொழிஞாயிறு பாவாணரை முன்னிட்டே அவர்தம் மொழித்

தொடர்பான செயற்பாடுகளை நோக்கியே நிறுவப் பெற்ற அமைப்பு ஆதலால் அதில் பாவலரேறு தம் ஏனைய கொள்கைகளையும் திணிக்க முற்படவுமில்லை; விரும்புவுமில்லை. இதுநிற்க!

உ.த.க.வின் முதல் மாநில மாநாடு முகவை மாவட்டம் பரமக்குடியில் நடைபெற்றது. (27, 28-12-69) மாவட்டச் செயலாளர் திரு. தமிழ்க்குடிமகன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து அம் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். இரண்டாவது மாநில மாநாடு மதுரையில் மாவட்டச் செயலாளர் திரு. வையைநம்பியை வரவேற்புக்குழுத் தலைவராகக் கொண்ட குழுவினரால் நடத்தப் பட்டது (9, 10-1-71). இம் மாநாட்டை ஒத்திவைப்பது தொடர்பாக எழுந்த சில சிக்கல்களால் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டார். மொழிஞாயிறு பாவாணர் அமைவு கூறியும் தம் முடிபை மாற்றிக்கொள்ள அவர் இணங்கவில்லை.

இந் நிலையில் திரு. தமிழ்க்குடிமகன் உ.த.க.வின் பொதுச் செயலாளராக விரும்பினார். பேரா. தி.வை. சொக்கப்பனார் உள்ளிட்ட சிலர் மொழிஞாயிறு பாவாணர் அவர்களிடம் அது பற்றித் தெரிவித்தனர். திரு. தமிழ்க்குடிமகன் உ.த.க.வை அரசியல் கட்சிச் சார்பாகவே கொண்டு சென்றுவிடக்கூடும் என்று சிலர் பாவாணரிடம் கூறினர். அதில் முதன்மையானவர் திரு. வையைநம்பி. பாவாணர்க்கும் அது சரி என்று பட்டதனால் அவர் ‘பொதுச்செயலாளர் இடம் அப்படியே இருக்கட்டும். பிறகு தீர எண்ணித் தக்காரை அமர்த்தலாம். அதுவரை துணைப் பொதுச் செயலாளரே செயற்பாடுகளை மேற்கொள்ளட்டும்’ என்று கூறிவிட்டார்.

இத்துணையும் அறியாதார், பாவலரேறு அவர்கள்தாம் பாவாணரிடம் கூறி இவ்வாறு செய்துவிட்டார் என்ற முடிவுக்கு வந்து விட்டனர். பழி ஓரிடம் பளகு ஓரிடம் என்பதுபோல் ஆகிவிட்டது.

மதுரை மாநாட்டுக்குப் பின்னர் உ.த.க.வில் தொடர்ந்து நீடிக்க விரும்பாத நிலையில் திரு. தமிழ்க்குடிமகனும் பிறரும் பிறகு தனி அமைப்பு ஒன்றினை நிறுவும் முயற்சியில் தலைப்பட்டனர். அதன் பின்னர் ஓராண்டு கழித்தே முனைவர் இளவரசு அவர்களைத் தலைவராகவும் திரு. தமிழ்க்குடிமகன் அவர்களைப் பொதுச் செயலாளராகவும் கொண்டு தமிழியக்கம் தொடங்கப்பட்டது.

உ.த.க. தஞ்சையில் தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்க மாநாடு ஒன்றை நடத்தியது. (31.12.’72) அதன்பின்பு சென்னையில் ஒரு மாநாடு நடைபெற்றது (1978).

பாவலரேறு அவர்கள் உ.த.க. பொதுச்செயலாளர் பொறுப் பினின்றும் விடுபட்டாலும் தம் கொள்கை நிலையிலோ, பாவாணர் அவர்கள்பால் கொண்ட பற்று நிலையிலோ எவ்வகை மாற்றமு மின்றி இயங்கி வந்தார். மதுரை மாநாட்டினின்றும் ஊர் திரும்பிய வுடனேயே பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலிக்கு விரிவான திட்டம் வகுத்து முனைப்பாகச் செயற்பட்டார். பின்னாளில் அரசு அத்திட்டத்தை மேற்கொண்டது.

'தமிழ்நிலத்தை விடுவிப்போம்!' என்னும் முழக்கத்தை முன் வைத்துப் பாவலரேறு தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு என்னும் பெயரில் திருச்சியில் ஒரு மாநாட்டை *(10, 11-6-72)* நடத்தினார். பின்னர் மதுரையில் ஒரு மாநாட்டையும் *(9,10-6-73)* நெருக்கடி நிலைக் காலத்தில் 'தமிழக விடுதலை மாநாடு' என்னும் பெயரிலேயே சென்னையில் ஒரு மாநாட்டையும் நடத்த முற்பட்டு அன்பர்களுடன் தளைப்பட்டுச் சிறை சென்றார். பின்னரும் அவர்தம் செயற்பாடுகள் உ.த.மு.க. அமைப்பாகவும் கூட்டமைப்புகளாகவும் இறுதிவரை தொடர்ந்தன.

இனி, தியாகு அவர்கள் கட்டுரைக்கு வருவோம். உலகத் தமிழ்க் கழகத்தின் நெறிமுறைகளும் உறுப்பாண்மை விளத்தமும் விரிவாக அமைந்திருக்க, அக்கழகம் தனித்தமிழ் நாட்டுக்காகவும் பொதுவுடைமைக்காகவும் முனைந்து பாடுபடவில்லை என்று வருத்தமுறுவது எவ்வகையில் ஞாயம்? அப்படியே இருந்தாலும் கழகத்தின் தலைவரை விட்டுவிட்டுப் பாவலரேறு அவர்களிடம் குறைகாணத் தொடங்கியது எப்படிச் சரியாகும்?

உ.த.க.வின் முதல் ஆண்டு மாநாடு பரமக்குடி மாநாடு. இக் குறுகிய காலத்துக்குள் ஓர் அமைப்பில் உறுப்பினராகி, முனைந்து செயற்பட்டு, கொள்கை மாற்றம் வேண்டிப் பொறுப்பில் உள்ளவர்கள் மேல் குறைகாணவும் தொடங்குவதற்கு எந்த அமைப்பு இடங்கொடுக்கும்?

உலகத் தமிழ்க் கழகம் தமிழைப் பேணி வளர்க்கவும் வாழ்வியல் நடைமுறையாக்கவும் அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு. அதில் தமிழுக்கு மாறானவற்றைச் சாடிப் பேசுவது இயல்பானதே. சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியைத் திருத்தவேண்டும் என்பதும் உ.த.க.வின் பதினொரு கொள்கைகளுள் ஒன்று. 'சென்னைப் பல்கலைக் கழக அகர முதலியின் சீர் கேடு' என்று ஒரு நூலையே எழுதி வெளியிட்டுள்ளார் பாவாணர். அதைத் திருத்திவிட்டால் உ.த.க.வைக் கலைத்து விடலாம் என்பது அதன் அழுத்தத்தைக் காட்டுதற்கே யன்றி வேறன்று.

'தமிழர்' என்னுஞ் சொற்கு 'விளிம்பில்லாத தீர்த்தப் பாத்திரம்' என்று சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலியில் பொருள் எழுதப்பட்டுள்ளதைப் பாவாணர் கூறியது உண்டேனும் பரமக் குடி மாநாட்டில் அதைச் சுட்டி அவர் பேசவே இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

அவ் வுரையிலேயே 'இப்படியே போனால் நாம் இன்னும் பத்தாண்டில் ஆட்சியைப் பிடித்துவிடலாம்' என்று பாவாணர் கூறினார். அது யாருக்கும் நினைவில்லை போலும்!

அதுபற்றிப் பின்னர்ப் பாவாணர் அவர்களிடம் வினவிய போது 'ஆட்சியைப் பிடிப்பதென்றால், நாமே போய் உட்கார்ந்து கொண்டு ஆட்சி நடத்துவது என்று பொருளன்று; நம் கொள்கைகளை நிறைவேற்றும் வண்ணம் செயற்படும் அரசு அமைய வழிசெய்வது' என்று விளக்கமளித்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இனி அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள பாவலர் மகிபை பாவிசைக்கோ மதுரையில் நடைபெற்ற தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாட்டில் பங்கேற்றவர். முனைவர் அரணமுறுவல் 1974 – வரை தென்மொழியில் அமைச்சராகப் பணியாற்றியவர். தென்மொழி கடலூரினின்றும் சென்னைக்கு வந்தபோது அதனோடு உடன் வந்தவர்.

இனி, "உலகத் தமிழ்க் கழகம் என்பது அறுக்கப்பட்ட செங்கல். இதில் உங்கள் கருத்துகளைத் திணிக்கமுடியாது" என்று பாவலரேறு அவர்கள் கூறியதில் என்ன தவறு? உலகந் தழுவிய நிலையில் தமிழ்த் தொடர்பான முயற்சிகளுக்கென்று திட்டமிட்டு நெறிமுறை வகுத்து அமைக்கப்பட்ட ஓர் அமைப்பில், படிவத்தில் உறுதிமொழிந்து உறுப்பினரானவர்கள் அக்கழகம் தொடங்கிய ஓராண்டுக் குள்ளாகவே, தாம் உறுப்பினரான சில மாதங்களிலேயே அதன் அடிப்படைக் கொள்கைகளையே மாற்றவேண்டும் என்று உறழாடுவது ஏற்கத் தக்கதா? திரு. மணியரசன் அவர்கள், தாம் குடிபுகுந்த பொதுவுடைமைக் கட்சியில் அவ்வாறு வாய்திறக்க வேனும் முடியுமா?

இனி, மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் ஒரு மொழி யாராய்ச்சியாளர் என்ற நிலையில் மட்டுமே வைத்து நோக்கத் தக்கவரல்லர். ஐம்பது ஆண்டுக்கால ஆராய்ச்சியின் மூலம் அவர் கண்ட முடிபுகளைத் தாங்கிய அவர்தம் நூல்கள் தமிழினம் தழைப்பதற்கு ஆணிவேரானவை. தமிழனுக்கு நெஞ்சுரம் ஊட்டித் தன்னம்பிக்கை கொள்ளச் செய்வன. அயர்ந்து கிடக்கும் அவனை

உசுப்பிவிட்டு, அவன்றன் தன்மான வுணர்வைத் தட்டி எழுப்புவன. தமிழ்த் தேசிய இனத்தின் கட்டமைப்போடு, அதன் உரிமை நல்வாழ்வு நோக்கிய போராட்டத்துக்கான படைக்கலங்களாக அமைந்தவை!

முன்னைத் திராவிட இனவுணர்வாளர்கள் முனைப்புக் கொள்வதற்குப் பாவாணரின் ஒப்பியன் மொழிநூலே கைக் கருவியாய் இருந்தது என்பது, அவ்வியக்கத் தலைவர்களே ஒப்புக் கொள்ளும் உண்மை.

'தமிழ் வரலாறு', தமிழனைக் கெடுக்கும் 'வடமொழி வரலாறு', 'பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்', 'தமிழர் வரலாறு', 'தமிழ் இலக்கிய வரலாறு', 'தமிழர் மதம்', 'தமிழர் திருமணம்', 'தமிழ் நாட்டு விளையாட்டுகள்', 'திருக்குறள் தமிழ் மரபுரை', 'வள்ளுவர் கூட்டுடைமை', 'தமிழ்நாட்டு வரலாறு' (எழுதித் திட்டமிட்டும் எழுதப்படவில்லை) என்பனவெல்லாம் புறக்கணிக்கப் படுமானால் எவ்வாறு தமிழ்த் தேசியம் மலரும்?

இற்றைத் தமிழ்த் தேசிய எழுச்சிக்கும் மலர்ச்சிக்கும் உ.த.க.வின் கொள்கைகளும் செயற்பாடுகளும் எத்துணை வலுவான அடித் தளமாக அமைந்தன என்பது, உ.த.க.வின் திருச்சி, பரமக்குடி மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை யெல்லாம் ஆய்ந் தோய்ந்து பார்ப்பின் நன்கு விளங்கும்.

உலகத் தமிழ்க் கழகத்தினின்றும் தம்மை விடுவித்துக் கொண்ட பாவலரேறு அவர்கள் அக் கழகக் கொள்கையையும் உள்ளடக்கிய விரிவான செயற்பாடுகளை மேற்கொண்டார்; சிறைப்பட்டும் நோயுற்றும் அல்லலில் உழன்றார். தமிழ் மக்களிடையே மன எழுச்சியை உண்டாக்கினார். ஆனால், உ.த.க.வினின்று வேறு வேறு கரணியங்களைக் கூறி வெளியில் சென்றவர்களெல்லாம் செய்து நிறைவேற்றியது என்ன?

இற்றை நிலையில் மக்கள்முன் வைக்கப்பட வேண்டிய எத்தனையோ செய்திகள் இருக்க, பழையனவற்றை யெல்லாம் கிளறிக்கொண்டிருக்க வேண்டாம் என்ற எண்ணத்தினாலேயே இதுவரை வாளா இருந்தோம். ஆனால், நந்தன்வழிக் கட்டுரையால் இத்துணையும் எழுத வேண்டியதாயிற்று. ஆயினும் இது சுருக்கமே. விரிவான வரலாறு இனித் தொடரும்.

திரு. தியாகு அவர்கள், இக்கட்டுரையின் மூலம் அவர் எழுதும் பிறவற்றின் மேலும் நமக்கு ஐயமெழச் செய்துவிட்டார்.

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயந் தரும் (திருக். 845)

உலகின் கதை!

— 'தமிழம்' பன்னீர் —

இப்பொழுது உள்ள நிலவுலகப் போர்வையையும் அதன் புற ஓட்டையும் வகுத்தமைக்கும் அடுக்குகள் எப்பொழுது எப்படி வந்தன? இங்கேயும் சான்று அருகியுள்ளது; ஆனால் அது இருக்கிறது. நிலவுலகின் வேதியியல் அமைப்பிலிருந்தும் பெரும்பாலும் விண்வீழ் கற்கள் அமைப்பில் உள்ள ஞாயிறு மண்டலத்தின் மற்ற பகுதிப் பாறைகளின் ஒப்பாய்வுகளில் இருந்தும் அகச் சான்றுகள் கிடைத்தன. வியக்கத்தக்க அளவுக்கு இந்தப் பெரும்பாலான பாறைகளில் ஓரே வகைக் கூட்டுப் பொருள்கள் உள்ளன. ஆகையால் அறிவியலார் ஞாயிறு மண்டல சராசரிக் கட்டமைப்பைக் கண்டறிய முடிகிறது. ஆராய்வாளர்கள் எப்படி நம்முடைய கோள் பிறவற்றிலிருந்து வேறுபடுகிறது என்பதைக் கண்டறியக் குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கவும் முடிகிறது.

இயனுலக வேதியியலுக்கும்(COSMIC CHEMISTRY) நிலவுலகத் தனிமங்களுக்கும் இடையில் மேற்கொண்ட ஒப்பீட்டு முடிவுகளால் பெரும்பாலான வளி மண்டலம் எங்கிருந்து வருகிறது என்றும், அது ஞாயிறு மண்டல ஒண்முகிற் படலத்திலிருந்து விடுவிக்கப்பட்டதன்று என்றும் நாம் அறிவோம். நிலவுலகில் மந்த வளிமம் (NEON) போன்ற வளிமங்கள் ஞாயிறு மண்டலம் முழுவதிலும் உள்ளவற்றை விட பல பத்து இலக்கம் தடவைகள் குறைவாக உள்ளன. நம்முடைய கோள் மற்ற கோள்களில் உள்ள வளிமங்களுக்கு இணையான அதே அளவு வளிமங்களுடன் தொடங்கியிருந்து அதன்பின் ஏதாகிலும் வளி மண்டலம் தொடங்கியிருக்குமானால் அது வெடித்துச் சிதறியிருக்கும்.

நம் வளி மண்டலம் நிலவுலகின் உள்ளிருந்து உண்டானது, இயங்கும் எரிமலைகள் இப்பொழுது வளிமங்கள் கலவையை – சிறப்பாகக் கரியீருயிரகையை, அதோடுகூட கந்தக ஈருயிரகை (SULPHUR DIOXIDE) கரியோருயிரகை(CARBON MONOXIDE) நீரியம்(HYDROGEN) போன்ற பிறவற்றையும் — உண்டாக்குகின்றன. ஆகவே முதுபழங்கால வளிமண்டலம் பெரும்பாலும் அதே பொருள்களால் சிறப்பாகக் கரியீருயிரகை போன்றவற்றால் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும். வளி மண்டல அழுத்தமும் பத்து

மடங்குக்கு அதிகமாக அப்பொழுது இருந்திருக்க வேண்டும். எரிமலை வெளித் தள்ளிய வளிமங்களிலிருந்து இறுகிய நீரால் தண்ணீர்க் குட்டைகளைப் போல் பெருங்கடல்கள் உண்டாயின. நிலவுலகின் போர்வையிலிருந்து எரிமலைகள் இந்த நீரையும் வளிமங்களையும் வெளியே கொண்டு வந்தன. நிலவுலகம் அமைந்த பொழுது அதனுள் கலந்திருந்த பொருள்களை அதன் மேற்பரப்புக்கு அவை கொண்டு வந்தன. தொடக்கக் காலத் தாக்க விளைவுகளால் நம் வளி மண்டலத்திற்கும் நீருலகத்திற்கும்(HYDROSPHERE) முறையே வளிமங்களும் தண்ணீரும் கிடைத்திருக்கலாம்.

சூரிய ஆற்றலால் கரியீருயிரகை தண்ணீர் ஆகியவற்றின் அணுத் திரண்மங்கள்(MOLECULES) உடைந்ததால் உலகில் கொஞ்சங் கொஞ்சமாக உயிரியம் சேரத் தொடங்கியது. ஆனால் உயிர்ப் பொருள்கள் இப்பொழுதைப் போல் அப்பொழுதும் வளிமண்டல வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்திருக்கலாம். 380 கோடி ஆண்டுகள் பழமையான கிரீன்லாந்துப் பாறைகளில் சில எளிய உயிரமைப்புகளிலிருந்து வந்ததாகக் கருதப்படும் கரியத்தின்(CARBON) அடையாளம் உள்ளது. 350 கோடி ஆண்டுகளுக்குமுன் பாறைத் திடல்கள்(MOUNDS) அமைவதற்கு நீல, பச்சை நிறக் கடற்பாசி (ALGAE) வகைகள் பெரும் பங்காற்றின. கரியீருயிரகையை உட்கொண்டு உயிரகத்தை வெளிவிட்ட நிலத் திணையுயிர்கள் (PLANTS) மலர்ச்சியுற்ற பிறகு வளிமண்டலம் உயிர் வாழ்க்கைக்கு உகந்ததானது. அதன் விளைவாக விலங்கினங்கள்(ANIMALS) நீரைவிட்டு வெளியேறி உலர்ந்த நிலத்தை நோக்கி நகர்ந்திருக்கலாம்.

ஆனால் அவை அப்படிப்பட்ட பெருத்த முன்னேற்றத்தை நோக்கி நடையிடும் முன்பு அங்கே சிறிது உலர்ந்த நிலம் இருந்திருக்க வேண்டும். இது கண்டங்களின் புற ஓடு(CONTINENTAL CRUST) அமைந்ததைக் குறிப்பிடுகிறது. நிலவுலகின் முதல் புறஓடு எரிமலைப் பாறைவகையால்(BASALT) ஆனது. அது இன்று பெருங்கடல் (OCEAN) நடுவில் அமைகின்ற மலைத் தொடர் (MID-OCEAN RIDGES) புற ஓட்டைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. எரிமலைப் பாறை கரிய நிறத்துடன், கடினமாக இருக்கும். அது இயல்பாகக் கண்களுக்குப் புலப்படாத அளவில் மிகச்சிறிய படிகங்களால் ஆனது. அவ்வகைப் பாறையால்தான் இன்று ஐசுலாந்து, ஆவாய் ஆகியவற்றில் எரிமலைத் தீவங்கள்(VOLCANIC ISLANDS) உருவாகியுள்ளன.

பெருங்கடல்களுக்கு அடியில் மெல்லிய அடுக்காகப் படிந்துள்ள வண்டல் மண்ணுக்குக் கீழே எரிமலைப் பாறையால் கடலில் தரை

அமைந்துள்ளது. பெருங்கடல்களின் இன்றைய ஓட்டைப் போலவே பழங்காலத்தில் இந்த ஓட்டில் சிறிதளவு நிலப் பகுதியாக அமைந்திருக்கலாம். ‘முதல் நூறு கோடி ஆண்டுவாக்கில் நிலவுலகின் மேற்பரப்பில் கடல்களுக்கிடையே எரிமலைத் தீவத் தொடர்கள் இருந்தன. வளரும் வளி மண்டலத்திற்குத் தொடர்ந்து வளம் சேர்க்க எரிமலைகள் வெளியேற்றிய – நீரகம்(HYDROGEN) நீரகக் கந்தகை(HYDROGEN SULPHATE), நீரகப் பாசிகை (HYDROGEN CHLORIDE) கரியோருயிரகை (CARBON MONOXIDE) கரியீருயிரகை (CARBON DIOXIDE) கந்தக ஈருயிரகை (SULPHUR DIOXIDE) இன்னும் பலவும் சேர்ந்த கலவையான — நீராலும் வளிமங்களாலும் இந்த நிலவுலகம் ஆவி நிறைந்து வாடை வீசிய ஓர் இடமாக இருந்திருக்க வேண்டும். சூரியனில் இருந்து வெளிப்பட்டக் கதிர் வீச்சாலும், ஒளியாலும் எரிமலை வளிமங்கள் ஒன்றோடொன்று எதிர்வினை நிகழ்த்தின. எரிமலையின் ஒவ்வொரு வெடிப்பையும் தொடர்ந்து வெளியான ஆவியைப் பாறைகள் மீண்டும் உறிஞ்சிக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். அதனால் பெருங்கடல்கள் உண்டாவதற்கு கொஞ்சங் கொஞ்சமாக நீர் சேர்ந்திருக்கலாம். பெருங்கடல்களில் நீர் அதிகரித்தபோது பெரும்பாலும் இந்நாளில் நடைபெறுவது போலவே அந்நாளில் மேலும் மேலும் எரிமலை வெடிப்புகள் நீருக்கு அடியில் நிகழ்ந்திருக்கலாம்.

இன்றுள்ள கண்டங்களின் மிகப் பழம்பெரும் பகுதிகளெல்லாம் ஒரு சமையம் கருங்கற்களாகவோ அல்லது அவற்றை யொத்த பாறைகளாகவோ இருந்தன. கருங்கல் மென்மை நிறங்கொண்ட பாறை. அது பெரிய படிகங்களால் ஆனது. வெறுங் கண்களுக்கு எளிதாகத் தெரியும்; ஒரு சில நூறு மாத்திரி குறுக்களவு கொண்டது. பாறைக் களிமத்தின் படிகங்களின் முகங்கள் குறிப்பாக ஒளிக் கவர்ச்சி உடையனவாய் இருப்பதால் அந்தப் பாறையைக் கட்டடங்க ளுக்கு அழகூட்டப் பயன்படுத்துகின்றனர். பெருங்கடல் தரை கண்டங்களுக்கு அல்லது மற்ற பெருங்கடல் தரைகளுக்குக் கீழே நழுவிய தாழ்வு மண்டலத்தில்(SUBDUCTION ZONE) இப்பொழுது கருங்கற்கள் அமைகின்றன. பெருங்கடல் ஓடு நீர் நயப்புடன் உள்ளது. ஏனெனில் எரிமலைப் பாறை கடலுக்கு அடியில் உள்ள நடுக்கடல் இடைக் கரைகளில்(MID OCEAN RIDGES) அமைகிறது. அங்கு எரிமலைக் குழம்பு வெடித்துக் கிளம்பிக் குளிர்வடைவதால் ஏற்படும் வெடிப்புகளாலும் பிளவுகளாலும் கடல் நீர் சுழற்சி பெறுகிறது. இந்த நீர் தாழ்வு மண்டலத்திற்குக் கீழே போகும்பொழுது அதனுள் அடங்கியுள்ள நீர் சூடாகி அதற்கு மேலுள்ள போர்வை

யின் வழி மேலே எழும்புகிறது. நீரும் நீர்த் தொடர்பான விரைவில் ஆவியாகும் தன்மையுள்ள(VOLATILE) மற்ற பொருள்களும் நிலவுலகப் போர்வையை உருகச் செய்கின்றன.

கண்டத்தின் ஓடும் காற்றில் உயிரகமும்:—

உண்மையான முதல் கண்டத்தின் ஓடு இப்படித்தான் அமைந்தது. கருங்கல்லும் அதன் சார்பான பாறைகளும் எரிமலைப் பாறையைக்(BASALT) காட்டிலும் அடர்த்தி குறைந்தவை. ஆகவே ஒருமுறை அமைந்த கண்டத்தின் ஓடு கீழேயுள்ள அடர்த்தி மிகுந்த பாறைமீது மிதந்தது. எளிதில் அழியக்கூடிய பெருங்கடல் ஓட்டைப் போலல்லாமல் அதன் குறைந்த மிதப்பாற்றலால்(BUOYANCY) அதை அழிப்பது கடினம். இப்பொழுது இருக்கும் பாறைகள் 400 கோடி ஆண்டுகளுக்கு முன் அமைந்தவை. பெரும்பாலான பழங்காலக் கண்டங்களின் உள்ளிடமும்(CORES) அவற்றின் ஓடுகளும் 260 கோடி ஆண்டுகளுக்குமுன் அமைந்தவை. கண்டங்கள் அமைந்த பிறகு வளி மண்டலத்தில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. கண்டங்கள் வளர்ந்த பிறகு அவற்றைச் சூழ்ந்திருந்த ஆழமற்ற கடற்பகுதிகளும் பெருக்க முற்றன. இந்த ஆழமற்ற கடற்பகுதிகளில் உயிர்கள் செழிப்புற்று வளர்ந்தன. அவை உயிரக உற்பத்தியை உயர்த்தின. மிக அதிகமாக இருந்த உயிரினம் கடற் பாசிதான். அதனால் உயிர்ம ஊட்டப் பொருள்கள்(STROMATOLITIES) அதிகரித்தன. கடற்பாசி வகைகள் ஏராளமான அளவில் சுதையக் கரியகை(CALCITE)– சுண்ணக் கரிய கையை(CALCIUM CARBONATE) குவித்தன. மேலும் கரியீருயிரகையை வளிமண்டலத்திற்குத் தப்பிச் செல்லாதவாறு தடுத்து அதைப் பெருத்த அளவில் நீருலகிற்(HYDROSPHERE) சேர்த்தன. அதன் முழுப் பயனாக வளிமண்டலத்தில் உயிரகத்தின் தகவளவு(PROPORTION) அதிகமாக உயர்ந்தது. இதற்குமுன் ஏதேனும் உயிரகம் வளிமண்டலத்தில் இருந்திருந்தால் அது கடலில் ஏற்பட்ட எதிர்வினை விளைவால் அதில் ஊறித் தோய்வுற்றிருக்கும்(SOAKED). .அதன் பிறகு வளி மண்டலம் அமைவதற்கு உயிரகம் உலகில் சேரத் தொடங்கியது.

அப்போதைய நிலவுலகின் நிலப் படத்தை வரைவதற்குப் போது மான நிலையில் அதன் வரலாற்றில் இரண்டாம் நூறு கோடி ஆண்டுகளின் தொடக்கத்திலிருந்து பாறைகள் அமைந்திருந்தன. அப்படி அமைந்து நிலைக்கத் தொடங்கிய பாறைகள் இரண்டு சிறப்பு வகைகளாக அமைந்தன. பசுங்கல்(GREEN STONE) இடை நிலப் பகுதிகள்(BELTS) எனப்பெறும் எரிமலைப் பாறைகளோடு வண்டல் படிவு(SEDIMENTS) கருங்கற் பாறை ஆகியவை இப்பொழுது

உருமாற்றம் பெற்றுள்ளன, எரிமலைக் குழம்பு(LAVA) கூட்டுப் பாறை (CONGLOMERATE) சகதிக் கல்(MUD STONE) மணற்கல் (SAND STONE) ஆகியவற்றை இந்தப் பழங்காலப் பாறைகளில் காணலாம். பாசி வகைகளைப் போன்ற முதுபழங்கால(PRIMITIVE) உயிர்ப் பொருள்களின் புதை படிவங்களும்(FOSSILS) அவற்றில் உள்ளன. ஆழ்கடல் தரையோடுகூட உலகின் பெரும் பகுதிகள் அப்பொழுதைப் போலவே இப்பொழுதும் உள்ளன. ஆத்திரேலியா, தென்னாப் பிரிக்கா, கனடா ஆகிய இடங்களில் இன்றும் நிலைத்திருக்கிற பழங்கால உலக ஓட்டுத் துண்டுகளில்(FRAGMENTS) மணிக்கற்கலவை (MOSAIC) போன்று பசுங்கல் இடைநிலப் பகுதிகளால் பிரிக்கப் பட்ட கருங்கற் பாறைப் பகுதிகள் உள்ளன. ஒரு துருத்தியைப் (CONCERTINA) போன்று பசுங்கல் இடைநிலப் பகுதிகள் நெருக்கமாக மடிந்தமைந்துள்ளன. ஆனால் அவற்றைச் சுற்றியுள்ள கருங்கற் பாறைகள் நெருக்கம் குறைந்து உருச் சிதைந்துள்ளன. இந்த அமைப்பு இன்று நிலவுலகின் மேற்பரப்பில் தட்டுகளின் அடுக்குப் போல மேம்போக்காகத் தோன்றுகிறது.

இந்த நிலவுலகம் இன்று இயங்கும் அதேமுறையில் முன்பும் இயங்கியதா? சான்றுகள் குறைவுதான். ஆனால் அவ்வப்பொழுது நிலவுலகின்மேல் ஓட்டுத் தட்டுகளில் செயலெதிர்ச் செயல் நடந் திருக்கலாம். ஆனால் இன்றைய முற்றிலும் பெருக்கமுற்ற உலகின் சிதைவு மாற்றம் போல் அப்பொழுது ஒன்றும் நடந்திருக்கவில்லை. பழங்காலக் கருங்கற்கள் இப்பொழுது அமைவதைப் போலவே அப் பொழுதும் அமைந்ததால் 400 கோடி ஆண்டுகளுக்கு முன் நடந்த பாறைக் கழிப்பு(SUBDUCTION) போன்று சில நிகழ்ச்சிகள் நடந் திருக்கலாம். இன்றையத் தட்டுகளைவிட உறுதியாக நிலைபெற்ற கருங்கற் பகுதிகள் சிறியவையாய் இருந்தன. ஆனால் பசுங்கல் இடைநிலப் பகுதியில் பல்வேறு வகையான பாறைச் சிதைவுகள் நிகழ்ந்தன. இமயமலை போன்று மலைத் திணை மண்டலங்கள் மிகப் பெருத்த அளவில் நிலத்தின் மேற்பகுதியில் நகர்ந்தன. அவற்றின் மேல் நோக்கிய வளர்ச்சி இரண்டு கண்டங்களின் நிலப் பொருள்கள் நெருங்கியதால் ஏற்பட்டதாகும். இந்தியாவும் ஆசியாவும் ஒன்றோ டொன்று மோதத் தொடங்கும்முன் குறைந்தது இந்தியாவும் ஆசியாவும் ஒன்றோடொன்று மோதத் தொடங்கும்முன் குறைந்தது 2000 அயிரமாத்திரி நகர்ந்திருக்க வேண்டும். பசுங்கல் இடைநிலப் பகுதிகளிலிருந்து கண்டங்களின் மேம்பாட்டுக்கும், தொய்வுக்கும் ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன. ஆனால் மோதல்களுக் கான அடையாளம் மிகவும் குறைவுதான். கண்டங்கள் மோதியதால்

அமைந்த தற்கால மலைத் திணை மண்டலம் மலை அமைவியல் (OROGENIC) எனப் பெறுகிறது. தட்டுகள் ஒத்தபடி நகர்வதால்தான் அவை அமைகின்றன.

நாம் நன்கு அறிந்துள்ள மிகப் பழமையான மலையமைப்பு மண்டலம் நிலவுலகில் 200 கோடி ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தது. அதற்கு முன்பு அவை இல்லாமல் இருந்ததற்கு அப்பொழுது நிலவிய வெப்பம் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இந்த நிலவுலகில் உயிர்கள் ஏறத்தாழ 1000C வெப்ப நிலையில் தோன்றத் தொடங்கின. அப்பொழுதிலிருந்து நிலவுலகம் குளிர்ச்சியடைந்து வருகிறது. முதல் 200 கோடி ஆண்டுவாக்கில் நிலவுலகின் தட்டுகள் இப்பொழுது இயங்குவனபோல் விரைப்பாக இயங்க முடியாதபடி உலகின் போர்வை மிகுந்த வெப்பமாக இருந்திருக்கலாம். பாறைகள் உலகின் மேற்பரப்பில் பெருமளவில் நகர்வதற்கு ஆதாரமாயில்லாதபடி அந்தத் தட்டுகள் அதிக நெகிழ்வு உடையவையாய் இருந்திருக்க வேண்டும். நிலவுலகு குளிர்ந்ததும் இப்பொழுதுள்ளவாறு அதன் தட்டுச் சிதை மாற்றமும் அதனுடன் மொத்த நடுப்பகுதியின் தொடர்ந்த மறு உருவாக்கமும்(RECYCLE) தோன்றின.

தட்டுச் சிதை மாற்றத்தால் பெருங்கடல் தரைப் பகுதி தொடர்ந்து ஆக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றது. அதில் ஒன்றுகூட 20 கோடி ஆண்டுகட்கு முற்பட்டதன்று. தட்டு நகர்வதால் கண்டங்கள் பிரிந்து போகின்றன. மற்றும் ஒன்றோடொன்று மோதுகின்றன. அது சார்பாக நிகழும் தொடர்ந்த நுட்பமான மாறுதல்கள் விளைவால் பெருங்கடற் பள்ளத்தாக்குகள் விரிவடையவும் சுருங்கவும் செய்கின்றன. கடந்த கால நிலவுலகின் மேற்பரப்பின் வரைபடம் இப்பொழுது காணப்படும் படத்தைப் போல் இல்லை. இருந்தபோதிலும் பெரும்பான்மை நடைமுறைகள் நில நூலருக்கு(GEOLOGIST) முன்பே அறிமுகமாகி யிருக்கலாம். எரி மலைகள், நில நடுக்கங்கள், நீர், காற்று ஆகியவற்றால் ஏற்படும் அரிப்புகள் எல்லாம் தொடக்க காலத்தில் இருந்தே நடைபெறுகின்றன. மலைத் தொடர்கள் வளர்ந்துள்ளன. பனியூழிக் காலங்கள் (ICE AGE) வந்து சென்றன. இப்படிப்பட்ட தொடர் நிகழ்ச்சிகட்கு மாறாக நிலவுலகத்தில் நிலத்திணை இல்லாமற் போயிருந்தால் அது இந்த வரலாற்றுக்கு ஒரு தொடர்பும் இல்லாததுபோல் தோன்றியிருக்கக் கூடும்.

நாம் வாழ்கின்ற சூழலின் உருவாக்கத்தில் உலகின் உயிரினங்கள் மாபெரும் பங்கு ஆற்றியுள்ளன. நிலவுலகின் நமக்குத் தெரிந்த

தொடக்க கால உயிரினங்கள் கடற்பாசி வகைகள்தாம். அவை 350 கோடி ஆண்டுகள் பழமையான பாறைகளில் புதை படிவங்களாகப் (FOSSILS) பாதுகாக்கப்பட்டுள்ளன. இதற்கு முந்தைய உயிர் வாழ்க்கை ஒளியியை பாக்கம்(PHOTO SYNTHESIS) ஏற்படுவதற்கு முந்திய தொடக்க காலத்ததாகும். நிலவுலகின் மிகவும் தொடக்க கால உயிர்களின் படிநிலைகளாகக் கடற்பாசி வகைகள்; ஆழமான பெருங்கடலுக்கு அடியில் வெப்ப நீரை அல்லது வெப்ப நீராற்றலை (HYDRO THERMAL) உடைய எரிமலைவாய் விளிம்புகளில் வாழ்ந்த நுண்மங்கள்(BACTERIA) ஆகியவற்றை இதற்குச் சான்றாகக் கூறலாம். பிற்காலத்தில் வளி மண்டலத்தில் உயிரகம் நிறைந்த பொழுது அதிகச் சிக்கல் உடைய உயிரினங்கள் பெருங்கடலில் தோன்றின. ஆனால் மிக எளிய உயிர் அமைப்புகள் குறிப்பிட்ட அளவுக்கு நிலத்தில் தோன்றுவதற்கு மேலும் 100 கோடி ஆண்டுகள் சென்றன. "மஞ்சள் கல் தேசீயப் பூங்காவின்" வெப்ப நீரூற்றுகள், சேற்றுக் குட்டை ஆகியவற்றைச் சுற்றிலும் வாழ்ந்த உயிர்களை ஒத்த முதல் பாசியினம் உயிர் வாழ்க்கைக்கு உகந்ததாயில்லாத அமைப்புகளில்(SETTINGS) வாழ்ந்திருக்கக் கூடும். அலாசுகாவில்(ALASKA) இப்பொழுது உள்ளது போல் அப்பொழுது ஆறுகளுக்கு நிலையான கரைகள் அமைவதற்கு அவற்றின் ஓரங்களில் நிலத்திணை இல்லாதிருந்தது. அதனால் கற்கள் நிறைந்த வெற்றுச் சமவெளியில் ஆறுகளின் தடங்கள் அடிக்கடி மாறி விரிவடைந்தன.

35 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே நிலத்திணைகள் (PLANTS) இவ்வுலகில் இயற்கை நிலக் காட்சி(LANDSCAPE) அமைவதற்குச் சிறப்புக் கூறுகளாக இருந்துள்ளன. பிற்காலத்தில் நிலக்கரிப் படிவுகளாக உருவாகிய காடுகள் அப்பொழுது வளர்ந் திருக்கலாம். சில மர வகைகள் பார்ப்பதற்கு வியப்பாக இருந் திருக்கலாம். ஆனால் அவற்றைப் போல் பல இன மரங்கள் இப்பொழுதும் வளர்கின்றன. இப்பொழுது நடைபெறும் அதே முறைதான் அப்பொழுது உலகின் மேற்பரப்பு அமைவதற்குத் தொடக்கமாக இருந்தது. அது அதிகச் சிக்கல் கொண்ட ஏராளமான உயிர்களுக்கும் முடிவாக மாந்தர்களுக்கும் வீடாக ஆனது. ஆனால் நிலவுலகின் உயிரியல்(BIOLOGY) இயற்பியல்(PHYSICS) வேதியல் (CHEMISTRY) ஆகியவற்றின் செயலெதிர்ச் செயல்(INTERACTION) இல்லாமலிருந்தால் அதன் வரலாறு முற்றிலும் வேறு வகையாக இருந்திருக்கும்.

— நன்றி – இந்து : 29.5.97

செய்திகள்

அமுதம் – உலகநம்பி(காசி விசுவநாதன்) மணவிழா!

தென்மொழியின் புரவலர்களுள் ஒருவரும் பாவலரேறு ஐயா அவர்கள்பால் பேரன்பு கொண்டவருமான ஈரோடைப் பாவேந்தர் மன்றத் தலைவர் திரு. பாவேந்தர் இராமலிங்கனார் இளவல் திரு. குமரன் – செல்வத் திருமகள் புதல்வி செல்வி அமுதம், தண்ணீர்ப்பந்தல்பாளையம் திரு. மா. சுப்பிரமணியம் – பாக்கியம் புதல்வன் செல்வன் உலகநம்பி (காசி விசுவநாதன்) ஆகியோர் திருமணம் தி.பி. 2029 துலை 23 திங்கள் (9.11.98) அன்று ஈரோடைக் கைக்கோளர் தோட்டம் ஆயிர நகர வணிகர் திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

புலவர் இறைக்குருவனார் தலைமையில் நடைபெற்ற இம் மணவிழா நிகழ்ச்சியில் புலவர் இரா. வடிவேலனார், தொல்லியல் ஆய்வறிஞர் புலவர் செ. இராசு, பாவலர் இரா. பெருமாள், புலவர் குறிஞ்சி சண்முகசுந்தரம் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரை யாற்றினர்.

வடபழனியில் தொடர்முழக்கப் போராட்டம்!

திருக்கோயில்களில் தமிழ்வழிபாட்டை வலியுறுத்தி, தி.பி. 2029 துலை 28 காரி (14.11.98) அன்று சென்னை– வடபழனி முருகன் கோயில் அருகில் பேரா. கலைமணி அவர்கள் தலைமையிலும் மரு.சே.சி. கண்ணப்பன், எம்.ஆர். பன்னீர்ச்செல்வம் முதலானோர் முன்னிலையிலும் தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது. திரு. செந்தமிழ்விரும்பி(பார்த்தசாரதி) வரவேற்றுப் பேசினார். பாவரசு வா.மு. சேதுராமன் தொடங்கிவைத்தார்.

செந்தமிழ் விரும்பிகள் மாமன்றத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இத் தொடர்முழக்கப் பேராட்டம், அன்று (14.11.98) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது. தென்மொழி அவையத்தின் சார்பில் புலவர் இறைக்குருவனார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

முனைவர் மா. நன்னன், ‘எழுகதிர்’ அரு. கோபாலன், உவமைப் பாவலர் சுரதா, புலவர் கி.த. பச்சையப்பன், வழக்கறிஞர் பொ.வே. பத்தவச்சலம், புலவர் சுந்தரராசன், சா. சந்திரேசன், புலவர் வேங்கடேசன், புலவர் தேவராசன், ‘முகம்’ மாமணி, பொறியாளர் பதுமநாபன், பாவலர் இராமச்சந்திரன், திரு. போசுகுமார், திரு. த.ப.சி. குமரன் மற்றும் பலர் உரையாற்றினர்.

'தமிழின முழக்கம்' நூல் வெளியீட்டு விழா!

பாவலர் சின்னராசுவின் 'தமிழின முழக்கம்' நூல் வெளியீட்டு விழா தி.பி. 2029 துலை 29 ஞாயிறு (15.11.98) அன்று மாலை, சென்னை – அரும்பாக்கம் இராதா திருமண மண்டபத்தில், உவமைப் பாவலர் சுரதா அவர்கள் தலைமையிலும், திருவாளர்கள் ந. இராமலிங்கம், க.மா. அய்யநாதன் முதலானோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் நூலை வெளியிட்டும், திரைப்பட இயக்குநர் சேகர் நூலின் முதற்படியைப் பெற்றுக்கொண்டும் உரையாற்றினர். பாவலர் கா. வேழவேந்தன், திரு. பழ. கருப்பையா ஆகியோர் நூல் கருத்தாய்வுரை நிகழ்த்தினர். பாவலர் இளமாறன் தொகுப்புரை வழங்கினார்.

புலவர் இறைக்குருவனார் வாழ்த்துரை வழங்கினார். 'எழுகதிர்' அரு. கோபாலன், திரு. ச.சி. நன்னன், புலவர் சுந்தரராசன், 'முகம்' மாமணி, வழக்கறிஞர் சுதா. இராமலிங்கம், பாவலர் வண்ணப் பூங்கா வாசன், பாவலர் இராமச்சந்திரன், திரு. செந்தமிழ்விரும்பி, பாவலர் அ.சி. சின்னப்பா, திரு. போசுகுமார் மற்றும் பலர் உரையாற்றினர்.

தமிழும் தமிழ்த்தேசியமும் – கருத்தரங்கம்.

தமிழ் வளர்ச்சிப் பேரவையின் சார்பில், தி.பி. 2029 நளி 5 காரி (21.11.98) அன்று வடசென்னைத் தியாகராயர் கல்லூரியில் இலக்கியத் தொடர்கூட்டம் (119) நடைபெற்றது.

புலவர் இறைக்குருவனார் தலைமையில் 'தமிழும் தமிழ்த் தேசியமும்' என்னும் பொருள் பற்றி நடைபெற்ற இக்கூட்டத்தில் புலவர் கோ. தேவராசன் வரவேற்புரையாற்றினார். திரு. தியாகு, பாவலர் இன்குலாபு ஆகியோர் உரை நிகழ்த்தினர். முன்னதாகத் திரு. அறிவுடைநம்பி, பாவலர் கதிரவன் ஆகியோர் பாடல் படித்தனர். புலவர் பொன்னிவளவன் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குந்தவி – இராக்கப்பன் மணவிழா!

அருந்தமிழ் ஆர்வலரும் தென்மொழியன்பருமான திரு. இரா. பதுமநாபன் – கற்பகம் இணையர் மகள் செல்வி குந்தவிக்கும், மண்ணச்சைத் திரு. துரைசாமி – இராசேசுவரி இணையர் மகன் செல்வன் இராக்கப்பனுக்கும் தி.பி. 2029 நளி 9 அறிவன் (25.11.98) அன்று சென்னை – வடபழனி விசயா மண்டபத்தில், திருமணம் நடைபெற்றது. மார்க்கசிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித்

தலைவர் திரு. வே. ஆனைமுத்து அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை யேற்று நடத்திவைத்தார்.

புலவர் இறைக்குருவனார், 'எழுகதிர்' அரு. கோபாலன், புலவர் கி.த. பச்சையப்பன், புலவர் சுந்தரராசன், புலவர் சாத்தன், புலவர் முத்து எத்திராசன், திரு. இராசேந்திரசோழன், கி. வெங்கடராமன், அ. பதுமநாபன், காஞ்சி. செல்வநம்பி முதலானோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

திருவொற்றியூரில் தொடர்முழக்கப் போராட்டம்!

திருக்கோயில்களில் தமிழ்வழிபாட்டை வலியுறுத்திச் சென்னை – திருவொற்றியூர்த் திருக்கோயில் முன்பு, தி.பி. *2029* நளி *11* வெள்ளி *(27.11.98)* அன்று, பாவலர் இராமச்சந்திரன் தலைமையில் தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது. திரு. பழ. கருப்பையா தொடங்கி வைத்தார். பாவரசு வா.மு. சேதுராமன், புலவர் கி.த. பச்சையப்பன், தணிகை மைந்தன் திருவள்ளூர்ப் பச்சையப்பனார், பாவலர் அ.சி. சின்னப்பா, திரு. வாசுகி கண்ணப்பன், திரு. இமயவாணன், திரு. சரவணன் முதலானோர் உரையாற்றினர். புலவர் இறைக்குருவனார் நிறைவுரை நிகழ்த்தினார்.

தமிழ் அறிவியல் மன்ற விழா – குன்றத்தூர்

தமிழ் அறிவியல் மன்றத்தின் மூன்றாவது ஆண்டு விழா தி.பி. *2029* நளி *12* காரி *(28.11.98)* அன்று முற்பகல், குன்றத்தூர்– திருவள்ளுவர் கல்வி நிலையத்தில் திரு. செயசீலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மன்ற ஒருங்கிணைப்பாளர் திரு. ச. வெற்றிச்செழியன் அனைவரையும் வரவேற்றார்.

புதிய தொழில் நுட்பங்கள் பற்றித் திருவாளர்கள் கோலப்பன் தணிகை. காமராசு, சான்சேவியர் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து, தமிழக அறிவியல் கழக அமைப்பாளர் திரு. மா. பூங்குன்றன் அவர்களை நடுவராகக் கொண்டு, 'அலோபதி மருத்துவத் தால் பெரிதும் விளைவது நன்மையா, தீமையா?' என்னும் பொருள் குறித்துப் பட்டிமன்றம் நடைபெற்றது. மாணவர்கள் இரு பக்கத்திலும் திறம்பட வழக்காடினர்.

குரு – பெருந்தேவி(மகேசுவரி) வாழ்க!

தென்மொழி அன்பரும் பாவலரேறு ஐயா அவர்கள்பால் பேரன்பு பூண்டவரும தீவாமங்கலம் திரு. மு. நடராசன் – தையல் நாயகி இணையர் மகனுமான செல்வன் குருவுக்கும், மன்னை– பாமணி திரு. கணேசமூர்த்தி – இராசேசுவரி இணையர் மகள் செல்வி பெருந்தேவி(மகேசுவரி)க்கும் தி.பி. *2929* நளி *20* ஞாயிறு *(6.12.98)* அன்று மன்னார்குடியில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. மணமக்களுக்குத் தென்மொழியின் சார்பில் வாழ்த்துகள்! ■

அணியமாகிவிட்டது!

பாவலரேறு ஐயாவின்
வண்ணப்படத்துடன்

தென்மொழி நாள்காட்டி

தேவைக்கு முந்துங்கள்!

நாள்காட்டி ஒன்றின்
விலை : உரு. 20.00
(பதிவஞ்சலில் பெற மேற்கொண்டு
உரு. 15/- இணைத்து அனுப்பவும்)

தொடர்புக்கு:

T. 5851

'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம்(சி.கே. பிளாட்சு),
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம், சென்னை - 601 302.

புதிய பதிப்பாக வெளிவந்திருக்கிறது!
பாவலரேறு ஐயா அவர்களின்

இட்ட சாவம் முட்டியது

விலை : உரு. 10.00

அஞ்சலில் பெற உரு. 15.00 அனுப்புக!
(பதிவஞ்சலில் பெற விரும்புவோர் உரு. 23 அனுப்புதல் வேண்டும்)

தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்,
செந்தமிழ் அடுக்ககம்(சி.கே. பிளாட்சு),
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம், சென்னை - 601 302.

தென்மொழி அலுவலகம் இட மாற்றம்

கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாகச் சென்னை – சேப்பாக்கம் அருணாசலத் தெரு 5-ஆம் எண் கட்டடத்தில் இயங்கி வந்த தென்மொழி அலுவலகம் இனி இடம்பெயர்ந்து ஐயா அவர்கள் நிலைகொண்டுள்ள மேடவாக்கத்தை யடைகிறது.

தொடங்கப்பெற்றது முதல் தென்மொழி அலுவலகம், கடலூரில் தொடர்ந்து இயங்கி வந்தது. தென்மொழி அச்சகமும் நிறுவப் பெற்றதோடு சிறுவர் கலை இதழான தமிழ்ச்சிட்டும் தொடங்கப் பெற்றது.

ஐயா அவர்களின் முதலாவது சிங்கை – மலையகச் சுற்றுச் செலவுக்குப் பின்னர் தி.பி. 2005இல் (1974) தென்மொழி – தமிழ்ச்சிட்டு அலுவலகமும் தென்மொழி அச்சகமும் தென்மொழி இல்லமும் கடலூரினின்றும் சென்னைக்கு இடம்பெயர்ந்தன.

இப்பொழுதுள்ள அலுவலகந்தான் மூன்றாவது தமிழக விடுதலை மாநாட்டு அலுவலகமாகவும், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொடக்க மாநாட்டு அலுவலகமாகவும் அமைந்தது. 'தமிழ்நிலம்' இதழ் தொடங்கப்பெற்றது. ஐயா அவர்களின் 'கொய்யாக்கனி', 'ஐயை' (முதற்பகுதி), 'பாவியக்கொத்து', 'எண்சுவை எண்பது', 'கற்பனை ஊற்று' அல்லாத கனிச்சாறு முதலான ஏனைய நூல்கள் அனைத்தும் இங்கேயே வடிவாக்கம் பெற்றன.

இவ்வலுவலகக் கட்டடத்தின் நிலையும், இதற்கான வாடகைத் தொகையேற்றமும் இனியும் இங்கிருந்து இயங்குவதற்கு இடந் தரவில்லை. ஐயா அவர்களின் அமைவிடமும், இல்லமும் மேடவாக்கத்தில் இருத்தலால் போக்குவரத்தும் சிக்கலாக உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாகப் பாவலரேறு தமிழ்க்கள அமைப்புப் பணியில் முனைப்பாக ஈடுபட வேண்டியிருக்கின்றது.

ஆகவே, அனைத்து நிலைகளையுங் கருதித் தென்மொழி அலுவலகத்தை மேடவாக்கத்திற்கு மாற்றத் திட்டமிட்டு ஆவன செய்துள்ளோம். அங்குச் சென்றபின் தமிழ்க்கள அமைப்புப் பணியோடு 'தமிழ்ச்சிட்டு' வெளியீட்டுப் பணியும் மேற் கொள்ளப்படும்.

த.நா.செ. (ந) மா. 7211 செ.ப.(ஆர்.என்.) எண் : 8119/63 தென்மொழி

தென்மொழி வெளியீடுகள் கிடைக்கும் இடங்கள்

நம் அரும்பெறல் ஐயா பாவலரேறு அவர்களின் நூல்கள் தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகத்தில் மட்டுமல்லாமல் கீழ்க்காணும் இடங்களிலும் விற்பனைக்கு கிடைக்கும்.

- நூழில் பதிப்பகம்,
  183, வெங்கட்டரங்கம் தெரு,
  சென்னை - 600 005.

- 'தமிழ்நிலம்'
  கணிப்பொறி இணையம்,
  அறை எண் : 2,
  2-ஆம் தளம்,
  33, வெங்கட்டநாராயணன் சாலை,
  நந்தனம்,
  சென்னை - 600 035.

- கீழைக்காற்று பதிப்பகம்,
  10, அவுலியா சாகிபு தெரு,
  எல்லீசு சாலை,
  சென்னை - 600 002

- விசயா பதிப்பகம்,
  20, அரச வீதி,
  கோவை - 1.

- அய்யனார் பொத்தக நிலையம்
  4, தட்டிலி(டட்லி) மேனிலைப் பள்ளி கட்டட வளாகம்
  திண்டுக்கல் - 1.

தென்மொழியின் புதிய முகவரி.

'தென்மொழி'
'தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்',
செந்தமிழ் அடுக்ககம்,
(சி.கே. பிளாட்சு)
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம்,
சென்னை – 601 302.

தென்மொழி

(தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்)

கட்டண விளக்கம்

ஆண்டுக் கட்டணம் (மலர் உட்பட)	உரு. 60.00
வாழ்நாள் கட்டணம்	உரு. 600.00
தனி இதழ்	உரு. 4.00

வெளிநாட்டுக் கட்டணம்

வானூர்தி வழி ஆண்டுக் கட்டணம்	உரு. 350.00
கப்பல் வழி ஆண்டுக் கட்டணம்	உரு. 250.00

தொடர்புக்கு:

தென்மொழி
செந்தமிழ் அடுக்ககம்,
(சி.கே. பிளாட்சு)
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம்,
சென்னை – 601 302.